29 ஆவது

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

Sky Tamil Media Network (Pvt) Ltd

+94757000791 www.skytamilmedia.com skytamil.lk@gmail.com பதிவு இல: PV 00249082 ISSN 2792-1026

மாதந்தோறும் : இதழ் - 29 : 30 மே 2023 #skytamil.lk





விதைக்குள் இருக்கிறது காடு - நூல் விமர்சனம்



மல்வானை அல் முபாரக் தேசிய பாடசாலை அறிமுகம்



ஆளுமை பெண்மணி விமலாதேவி அவர்களின் அறிமுகம்




மாத்தளையில் உள்ள ஒரு அழகிய கிராமத்தைப் பற்றிய அனுபவப் பகிர்வு



சிங்கப் பெண்ணாய் வீறுநடை போடும் விவசாய போதனாசிரியை முர்ஷிதா ஷிரீன் அவர்களுடனான நேர்காணல்

விதைக்குள் இருக்கிறது காடு-நூல் விமர்சனம் 05

மல்வானை அல் முபாரக் தேசிய பாடசாலை அறிமுகம் 18

ஆளுமை பெண்மணி விமலாதேவி அவர்களின் அறிமுகம் 25

மாத்தளையில் உள்ள ஒரு அழகிய கிராமத்தைப் பற்றிய அனுபவப் பகிர்வு 40

சிங்கப் பெண்ணாய் வீறுநடை போடும் விவசாய போதனாசிரியை முர்ஷிதா ஷிரீன் அவர்களுடனான நேர்காணல் 44

**பணிப்பாளர்:**
ஜே.எம். பாஸித்

**உதவிப் பணிப்பாளர்:**
நஸ்ரின் பானு

**பிரதம ஆசிரியர்:**
ஷிஹானா நௌபர் - பலாங்கொடை

**இணையாசிரியர்:**
முனீரா வாஹித் - பதுளை
முஹம்மட் ஹாசில் - அநுராதபுரம்

**நிர்வாக குழு:**
ஆர்.எம்.சப்ராஸ் - புத்தளம்
தாரிக் முஹம்மத் - சம்மாந்துறை
குலசிங்கம் கிலசன் - கல்முனை
ஜவ்சன் அஹமட் - மருதமுனை
ஸகியா பாறுக் - சம்மாந்துறை

**ஆசிரியர் குழு :**
எம்.பஹ்த் ஜுனைட் - காத்தான்குடி
கமறுன் நிஸாம் (ஷாமெஹ்) - கண்டி
எம்.ஏ.எப்.முபஸ்ஸிரா – கொழும்பு
மஜினா உமறு லெவ்வை – மாவடிப்பள்ளி
சி. கற்பஹாசினி - பலாங்கொடை
பெனாஷில் ஷிப்னா – ஏறாவூர்
நிஹாசா நிசார் - கத்தார்
றிஹானா இஷாக் - கம்பளை
பயாஸா பாஸில் - கம்பஹா
ஜஸூரா ஜலீல் - மலேசியா
பாத்திமா சம்சுடீன் - சாய்ந்தமருது
அவ்ஷபா நாகூர்- ஏறாவூர்

**மேற்பார்வையாளர்:**
அஸ்வர் ரிஸ்வி – கத்தார்
றொஸான் முஹம்மட் - சாய்ந்தமருது

**ஆலோசகர்கள் :**
கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல்
கவிஞர் நஜ்முல் ஹுசைன்
ரஷீத் எம்.பியாஸ்(நளீமி)
வசீமுல் அக்றம் - சட்டத்தரணி
பிஸ்ரின் முஹமத் - ஊடகவியலாளர்
ரினூசா நௌஷாட் - ஊடகவியலாளர்
ஜெஸீம் ஏ. ஹமீட் - ஐக்கிய இராஜ்ஜியம்

# துணிந்தெழு
**வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்**

இறைவனின் அருளாலும், துணிந்தெழு சஞ்சிகை
வாசகர்களின் ஆதரவுடனும்,
ஆசிரியர் குழுவினரின் விடா முயற்சியுடனும்,
புதிய மாறுதல்களுடன் வீறுநடை போட்டுக்
கொண்டிருக்கிறது எமது சஞ்சிகை.
புகழனைத்தும் இறைவனுக்கே
துணிந்தெழு சஞ்சிகை வளர்ச்சிக்கு
உறுதுணையாக
இருக்கும் எல்லாம்வல்ல இறைவனுக்கும்,
வாசகர்களுக்கும், சஞ்சிகை ஆசிரியர் குழாமிற்கும்
நெஞ்சார்ந்த நன்றிகள்.

தங்களது படைப்புகளும் எங்களது சஞ்சிகையில்
இடம்பெற வேண்டும் எனின் கீழ் குறிப்பிட்ட
ஈமெயில் மற்றும் வட்சப் இலக்கத்திற்கு
அனுப்பி வையுங்கள்
***+97431060249 | | 0757000791***
**skytamil.lk@gmail.com**
**www.skytamilmedia.com**



**ஜே.எம்.பாஸித்**
பணிப்பாளர்
ஸ்கை தமிழ் மற்றும்
துணிந்தெழு சஞ்சிகை
0776391188
basithjm@gmail.com



**ஷிஹானா நௌபர்**
பிரதம ஆசிரியர்
துணிந்தெழு சஞ்சிகை
0781069510

*முகவரி:*
**துணிந்தெழு சஞ்சிகை**
**Sky Tamil Media Network**
28, Al Hilal Road,
Sainthamaruthu -11

Scan QR Code

# 14 வயதுப் பிரிவுக்கு உட்பட்ட மாணவன் அஹ்சான் 16,18,20 வயதுப் பிரிவில் போட்டியிட்டு சம்பியன்



*இரத்தினபுரியில் வித்யாராஜா கல்லூரியில் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அதிபரின் தலைமையிலும் உடற்பயிற்சி ஆசிரியர், விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களின் ஒத்துழைப்புடன் 14.03.2023 அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது.*

*இதன் போது தரம் 8 இல் கல்வி கற்கும் 14 வயதுப் பிரிவிற்கு உட்பட்ட மாணவன் எம்.ஏ.எம். அஹ்சான் 16 வயதுப் பிரிவில் 200 மீற்றர், 400 மீற்றர் ஓட்டபோட்டியிலும் மற்றும் 18 வயதுப் பிரிவிற்கு உட்பட்ட 100 மீற்றர் ஓட்டப்போட்டியிலும் கலந்துக் கொண்டு முதல் இடத்தை பெற்று சம்பியன் அடைந்துள்ளார்.*

*அதே போல் 20 வயதுப் பிரிவில்* 100x4 *மீற்றர் அஞ்சல் ஓட்டப்போட்டியிலும் கலந்து கொண்டு முதல் இடத்தை பெற்றுள்ளார்.*

*இம்மாணவன் இவ்வாறு தன் திறமையை வெளிக்காட்டியது தொடர்பாக அனைவரும் பாராட்டுக்களை தெரிவித்தனர். 14 வயது பிரிவில் போட்டியில் கலந்து கொண்டால் முதல் இடத்தை எப்படியும் பெற்றிருப்பார் எனினும் அவரின் திறமையை மேலும் முன்னேற்றவே இவ்வாறு போட்டியில் ஈடுபடுத்தி வெற்றியும் அடைந்துள்ளார். இம்மாணவன் கால்பாந்து போட்டியிலும் ஓட்டப்போட்டியிலும் பயிற்சி பெற்று வரும் வருகின்றார்.*

*ஒரு திறமையான மாணவன் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரின் பயிற்றுவிப்பாளராக ஆசிரியர் இசான், ஆசிரியை காமினி அவர்களும் செயற்படுகின்றனர். இவர் விளையாட்டில் சாதிப்பதனையே நோக்கமாக கொண்டுள்ளார். ரொனால்டோவை போன்று ஒரு சிறந்த கால்பந்து வீரராக வரவேண்டும் என்பதே எதிர்பார்ப்பு என்று அம்மாணவன் குறிப்பிட்டார்.*


*இவர் அனீஸ் மற்றும் நிசாயா தம்பதிகளின் புதல்வனும் ஆவார். ஆரம்பத்தில் தனியார் பாடசாலையில் கல்வி கற்றார் எனினும் விளையாட்டில் ஈடுபாடு காட்டுவதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை அத்துடன் பெற்றோர்கள் தற்போது கல்வி கற்கும் வித்யாராஜா கல்லூரியில் சேர்த்ததனை அடுத்து விளையாட்டில் அதிக வாய்ப்பு கிடைத்துள்ளது. இது தொடர்பாக அஹ்சானின் பெற்றோர்கள் பாடசாலை நிர்வாகத்திற்கும், விளையாட்டு பயிற்று விப்பாளர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொண்டனர்.*

*இம் மாணவன் விளையாட்டில் மட்டுமன்றி கல்வி கற்பதிலும் திறைமையுள்ள ஒரு மாணவனாக காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. இம்மாணவனின் எதிர்காலம் சிறப்பாக அமைய வாழ்த்துக்கள்.*

***ஆசிரியர் எம். எம் . எம் நுஸ்ஸாக்***

# விதைக்குள் இருக்கிறது காடு

## நூல் விமர்சனம்




*தஞ்சை விஜய் எழுதியுள்ள தனித்த வடிவ ஹைக்கூக்கள் தஞ்சை மண்ணின் பெருமையினைத் தரணி முழுதும் பறைசாற்றும்! விஞ்சும் புகழைப் பெற்றிடவும் வெற்றி வாகை சூட்டிடவும் கொஞ்சம் தமிழில் சொல்லெடுத்துக் கொத்து மலரால் வாழ்த்துகிறேன்!*

*பதிப்புரை, அணிந்துரை, வாழ்த்துரைகள், என்னுரை,....தாண்டி ஒற்றை விதைக்குள் இருக்கிறதா?காடு என்ற கேள்விக்கு 207 ஹைக்கூ கவிதைகள் மூலம் விடையளிக்கிறார் தஞ்சை விஜய்.*

*ஜப்பானில் இருந்து வந்த கவிதை வடிவம் தான் ஹைக்கூ என்ற போதும் தூண்டிலில் நாக்குப் பூச்சியைக் கண்டதும் எளிதாகச் சிக்கும் மீன்களாக...*

*ஆர்வத்தால் பலரின் ஹைக்கூக்களைக் கண்டுணர்ந்ததால் இளம் வயதிலேயே ஹைக்கூக்கள் எளிதாக வசப்படுகின்றன நூல் ஆசிரியர் தஞ்சை விஜய்க்கு....!*

*"பார்க்கும் காட்சி மனதைப் பாதித்தாலோ அல்லது மனதுக்குள் பதிந்தாலோ அது ஹைக்கூ பூவாக மலரும்"*

*என்பதைப் பதிப்பாளர் ஜின்னா அஸ்மி அவர்கள் முத்தாய்ப்பாய் முதலிலேயே பதிவு செய்துள்ளார். அதனை அப்படியே பட்டவர்த்தனமாகப் படம் பிடித்துக் காட்டி கவிதையாக்கியுள்ளார் தஞ்சை சமூக பிரச்சினைகள் பலவற்றை முன்னிறுத்தும் ஆசிரியர் அதற்குத் தகுந்த தீர்வும் தந்துள்ளார். இப்படித்தான் இப்புத்தகத்தின் முதல் கவிதை வரவேற்கிறது.*

*"வெறும் வயிற்றில் விவசாயி நகரத்து வாசிகள் தருகின்றனர் குப்பைத் தொட்டியிடம் உணவு." தஞ்சையில் உள்ள தெற்கு நத்தம் என்ற குக்கிராமத்தில் பிறந்த தஞ்சை விஜய் தன் வாழ்வின் வறுமையையும் கண்முன்னே நிறுத்துகிறார்.*

***"நிறைய விருதுகள் வைப்பதற்குப் போதிய இடமில்லை குடிசையில் கவிஞன் "***

*இந்தக் கவிதை ஏழ்மையில் வாழும் பிற கவிஞர்களை மனதில் வைத்து எழுதி இருந்தாலும் என் மனத்தில் என்னவோ சாதனை மாணவர் விருது, மகாத்மா காந்தி நினைவு விருது,கலைச்சிற்பி விருது. மற்றும் தஞ்சை பிரகாஷ் நினைவு வளரும்*

படைப்பாளர் விருது", சமூக நல சிந்தனையாளர் விருது என்று பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ள அகரம் அறக்கட்டளை மூலம் தனது கல்லூரி கனவை நனவாக்கி அடுத்தடுத்து நூல் எழுதி தனது படைப்பாக்க முயற்சியால் ஆகச்சிறந்த சாதனையாளராகப் பயணிக்கும் இந்நூல் ஆசிரியர் தஞ்சை விஜய் தான் என் கண் முன்னே நிழலாக மட்டுமில்லை நிஜமாகவும் தெரிந்தார்.

மதுவின் போதையில் மயங்கி மதி கெட்டுத் திரியும் பலரையும் இயல்பு நிலைக்கு எழுப்பி விடும் கவிதைகள் பலவும் உள்ளன.

"மாணவர்களுக்குள் சண்டை தலையை உடைக்க வைத்தது தலைக்கேறியப் போதை."

"கையேந்திய யாசகன் தட்டு நிறைந்ததும் சென்றான் மதுக்கடை வாசல்."

"தந்தை விற்கிறார் கூழ் மகன் காலையிலேயே குடிக்கிறான் கள்ளச்சாராயம்"

"தொப்பைப் பெருத்த அப்பா காலையெழுந்து நடக்க ஆரம்பித்தார் மதுக்கடைக்கு"

"குடும்பத்தில் சண்டை தினந்தோறும் நடக்கிறது மது விற்பனை "

பிச்சையெடுத்துக் குடிக்கும் தேசத்தில் குடிமகன்கள் பலரும் கீழே விழுந்து கிடக்க எழுந்து தள்ளாடி நடத்துகிறது அரசாங்கம். ஆம் மதுவை விற்பனை செய்து அந்த வருமானத்தில் நல்லாட்சி நடத்துவதாகச் சொல்லும் ஆட்சியாளர்கள் மீது கவிஞனுக்கு சீற்றம் இருப்பதாகவே தோன்றுகிறது. இதனால் நூல் ஆசிரியர் எப்போதும் மதுவை வெறுப்பார் மாதுவை மதிப்பார் என்பதை உள்ளுணர்வு உணர்த்தியது.

"ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காணலாம்" என்பது ஆன்றோர் வாக்கு. இந்தச் சிந்தனையைப் பெரும்பாலான கவிதைகளில் தெறிக்க விடுகிறார்.

செய்த பாவத்திற்குப் பரிகாரமாகக் கோயிலில் உள்ள தெய்வத்துக்குப் பங்கு வைத்துப் பாவ விமோசனம் தேடும் நபர்கள் இப்பொழுதெல்லாம் பல்கிப் பெருகி விட்டனர். ஆனால் அதனை ஏழைகளுக்குச் செய்வதற்கு மனம் இல்லாமல் உள்ளனர் என்பதையும் சுட்டிக்காட்டுகிறார்.

"வீட்டிற்குள் கறி விருந்து வாசலில் நின்ற யாசகனுக்குக் கிடைத்தது பழையச் சோறு."

"யாசகனுக்கு ஒத்த ரூபாய் தர மறுத்தவர் விரல்களில் பத்துத் தங்க மோதிரங்கள் "

இன்று பிரபலமான வடிவமாக இருக்கும் ஹைக்கூவில்

"விதை" குறித்து ஏராளமானவை உள்ளன அவற்றிலிருந்து ஒரு சில

"விதை வீசிய இடத்துக்கு வருடங்கள் கடந்து சென்றேன் இருக்கிறது காடு."

"கடுகு அளவு விதை சிறுவர்களைத் தாங்கி நிற்கின்றது ஆலமர விழுதுகள்"

"விதைகளோடு மரம் எரிந்து சாம்பலானது நாளைய காடு."

ஒவ்வொரு காட்சியையும் உற்று நோக்கி எழுதியிருக்கும் இந்தக் கவிதைகளின் பொருண்மையை விளக்கிக் கொண்டே செல்லலாம். அவரவர் கற்பனைக்கு ஏற்ப மேலும் விரிவானமாய் விரித்துக் கொள்ளலாம்..

நான் ஒன்றிரண்டு, பொருண்மைகள் பற்றி மட்டுமே குறிப்பிட்டுள்ளேன். கல்வியின் முக்கியத்துவம், பெண்களின் பெருமை, பனையின் அருமை, வறுமை, முயற்சி, என்று பல்வேறு பாடு பொருட்கள் குறித்த கவிதைகளைச் சுமந்து நூறு பக்கங்களுக்குள் அழகிய அட்டை வடிவமைப்புடன் நூல் அமைந்துள்ளது விதைக்குள் இருக்கும் காட்டிற்குள் வியனா

யுள்ள கவிதைகளில் புதைந்து இருக்கும் செய்திகளில் புலரும் உண்மை கருத்துகளால் கதைக்கும் செய்தி பலவாகும்! கவியாய் அமைந்த வடிவாகும்! அதையும் உணர்ந்து செயல்படுவோம் அதிக பயன்கள் அடைந்திடுவோம்! "நீரைப் பாய்ச்சி கொண்டே இருங்கள்.

விதை முளைக்கும் வரை அல்ல.. விதை கொடுக்கும் வரை " என்ற என்னுரை வரிகளில் கவிஞனின் சிந்தனை ஒளியை விடவும் பல நூறு மடங்கு விரைவாகப் பாய்கிறது...!

இப்புத்தகத்தைப் படிப்பதன் மூலம் மலரும் மாற்றம் நிறையாகும்..

விதையினை விதைத்துக் காட்டினை உருவாக்குவோம்! புதையலாய்க் கிடைத்த ஹைக்கூக்களால் புத்துணர்ச்சி அடைவோம்.

விதைக்குள் இருக்கிறது காடு! வெற்றித் தருமதனை நாடு!

***கவிஞர். மாலதி திரு***








# வெற்றிகரமான ஆசிரியர் பணியை நோக்கி...

**ஏ.எச்.எப்.சதானா**
**கஹடோவிட்ட**

ஆசிரியத் தொழில் என்பது உலகில் காணப்படும் ஓர் உன்னத சேவை ஆகும். உலகில் இரண்டு புனிதமான இடங்கள் காணப்படுகின்றன. ஒன்று தாயின் கருவறை இன்னொன்று ஆசிரியரின் வகுப்பறை. தாயின் கருவறையில் ஒருவன் உயிரைப் பெறுகிறான். ஆசிரியரின் வகுப்பறையில் அவன் அறிவைப் பெறுகிறான்.

ஆசிரியத்துவம் பற்றி பேசும் போது கூறப்படும் ஒரு பிரபல கூற்றே

**“வகுப்பறையில் நுழையும் அனைவருமே ஆசிரியர்கள் கிடையாது. மாறாக மாணவர்களின் இதயங்களில் நுழைபவர்களே ஆசிரியர்கள் ”.**

ஒரு பிள்ளை பிறந்து வளர்ந்து சமூகத்திற்குள் உள்வாங்கப்படுவதன் ஆரம்ப அடிப்படை பாடசாலைகளிலேயே இடப்படுகின்றன. இப்பணியை பாடசாலையில் ஆசிரியர்களே முன்னெடுக்கின்றனர். எனவே ஒரு சமூகத்தை கட்டமைக்கும் ஆரம்ப அடிப்படையை இடுபவர்கள் இவ்வாசிரியர்களே. எனவே சமூகத்தை கட்டமைக்கும் பாரிய பொறுப்பை தம்

கைகளில் சுமந்து நிற்கும் ஆசிரியர்கள் எப்போதும் ஒரு வெற்றிகரமான ஆசிரியராக தம்மை நிலை நிறுத்திக் கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும். இன்றேல் முழு சமுதாயமுமே ஒருநாள் கைசேதப்பட வேண்டிய ஒரு துரதிஷ்டம், ஏற்படும் என்பது நிச்சயம்.

ஒரு வெற்றிகரமான ஆசிரியர் தன்னகத்தே சில பண்புகளை கொண்டிருக்க வேண்டும். குறிப்பாக தமது ஆளுமையை சிறந்த முறையில் வெளிக்கொண்டு வந்து மாணவர்களை கவர்வதற்கு இப்பண்புகள் இவர்களுக்குத்துணை புரியும். அவற்றை பின்வருமாறு நோக்கலாம்.



ஆசிரியர் தொழிலில் நுழையும் ஒருவர் முதன்முதலாக அறிய வேண்டிய விடயம் தான் இறுதிவரை எவ்வாறு மாணவர்களை வெற்றிகரமாக வழி நடத்தலாம் என்பதை ஆகும். அதாவது வெவ்வேறுபட்ட திறன்களுடனும் திறமைகளுடனும் ஆசிரியப் பணிக்குள் நுழையும் ஒருவர் கால ஓட்டத்தில் தமது திறமைகளையும் திறன்களையும் வெறுமனே வீணாக மழுங்கிப் போய் விடாது நவீன தொழில்நுட்ப உலகுடன் எவ்வாறு தன்னை பொருந்தச் செய்து வெற்றிகரமாக நடை போடலாம் என்பதை அறிந்து அதற்கேற்ப தன்னை தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

இன்றேல் துரித மாற்றங்களுக்கு உட்பட்டு வரும் நவீன தலைமுறையினருக்கு மத்தியில் காலாவதியான ஒரு ஆசிரியராக அடையாளம் இழந்து போகும் அவலம் ஏற்படும்.

எனவே ஆசிரியர்கள் வெற்றிகரமான முறையில் தமது பணியை முன்னெடுக்க வெவ்வேறு உபாயங்களின் ஊடாக தம்மை தயார்படுத்திக் கொள்வது அவசியம். அதில் பிரதானமானது ஆசிரியர்கள் எப்போதும் வாழ்நாள் முழுவதும் கற்பவராக இருக்க வேண்டும்.

அதாவது கற்றல் என்பது ஒரு கட்டத்துடன் நிறைவடைய கூடிய ஒன்றல்ல. கல்விக்கு எல்லையே கிடையாது. இன்றைய நவீன தொழில்நுட்ப உலகை பொருத்தவரை அறிவு என்பது தாராளமாக ஊற்றெடுக்கும் யுகமாக காணப்படுகின்றது.

தகவல் பரிமாற்றம் நொடிப்பொழுதில் இடம் பெறுகிறது. எதையும் விரல் நுனியில் கற்றுக் கொள்ளும் வசதி காணப்படுகின்றது. நேற்றைய அறிவு இன்று காலாவதியாகிவிடும் நிலை காணப்படுகின்றது. ஒவ்வொரு நொடிப் பொழுதிலும் புதுப்புது அறிவுகளும் தொழில்நுட்பமும் அறிவியல் உலகை ஆக்கிரமித்த வண்ணம் உள்ளது.

இத்தகைய ஒரு அசுர வேக வளர்ச்சியில் செல்லும் ஒரு தலைமுறையினருக்கே நாம் இன்று கற்றுக் கொடுக்க வேண்டும் என்பதை ஒவ்வொரு ஆசிரியரும் மனதில் கொண்டு செயல்படுவது முக்கியமாகும். ஒவ்வொரு நாளும் இற்றைப் படுத்தப்படும் அறிவை ஆசிரியர்கள் ஏதோ ஒரு வழியில் பெற்று தம்மையும் தினமும் இற்றைப் படுத்திக் கொள்ள வேண்டும். இதன் பொருட்டு நவீன தொழில்நுட்ப சாதனங்களை தாராளமாக அணுகக்கூடிய அறிவுடையவராக ஒரு ஆசிரியர் மாற வேண்டும்.

எடுத்துக்காட்டாக கொரோனா பெருந்தொற்று காலத்தில் கற்றல் கற்பித்தலில் ஏற்பட்ட உடனடி மாற்றத்தை இதற்கு குறிப்பிடலாம். விரும்பியோ

விரும்பாமலோ கற்றல் கற்பித்தலுக்கு நவீன தொழில்நுட்பத்தின் துணையை நாட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இதன்போது இத்தொழிநுட்பங்களை வெற்றிகரமாக பயன்படுத்தும் அறிவை பெற்றிருந்த ஆசிரியர்கள் வெற்றிகரமாக தமது கற்பித்தல் பணியை முன்னெடுத்தனர். எனவே மாறிவரும் உலகிற்கேற்ப தம்மை மாற்றிக் கொள்வது ஆசிரியர்களின் கட்டாய கடமை எனலாம்.

நவீன தொழில்நுட்ப சாதனங்கள் ஆசிரியர்களுக்கு தங்களின் கற்பித்தல் முறைகளை மாற்றி அமைக்க உதவும். பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் கருத்துப்படி தகவல் தொடர்பு சாதனங்களின் சிறந்த பயன்பாடு என்பது தொழில்நுட்ப சாதனங்களின் உதவியுடன் மாணவர்களின் புரிதல் மற்றும் சிந்தனையை முழு வகுப்பு அல்லது சிறு குழு விவாதங்கள் மூலம் சீர்படுத்துவதாகும்.. அதாவது இம்முறை மூலம் கற்பித்தல் என்பது ஆசிரியரை மையப்படுத்திய முறையில் இருந்து மாற்றம் பெற்று கற்பவரை மையப்படுத்திய முறைக்கு மாற்றுகிறது. அது மட்டுமின்றி ஒரு சிறந்த ஆசிரியர் தகவல் தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்தி கற்பிக்கும் போது மாணவர்கள் கடினமான பாடங்களை கூட இலகுவாகவும் எளிதாகவும் புரிந்து கொள்வர் .

ஆசிரியர்கள் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்களை கற்பித்தல் பயன்பாட்டில் சிறப்பாக ஒருங்கிணைக்க அவற்றை பயன்படுத்த தேவையான திறன்கள் பற்றி மட்டும் அறிவது போதாது. மாறாக சரியான வளங்களை தேர்ந்தெடுக்க மற்றும் மதிப்பிட ஆசிரியர்களுக்கு தகவல் தொடர்பு தொழில்நுட்பம் பற்றிய விரிவான தொடர் பயிற்சிகள் அவசியம். அத்துடன் கற்பித்தல் முறைகளை மேம்படுத்த அவற்றை எப்படி பயன்படுத்துவது என்பதில் அதிக கவனம் எடுப்பது அவசியம்.

அதேபோல் ஒரு வெற்றிகரமான ஆசிரியர் எப்போதும் மாணவர்கள் மத்தியில் நேர் மனப்பாங்குகளையும், சுதந்திர உணர்வையும், கற்றல் தொடர்பான ஆர்வத்தையும் தூண்டக்கூடியவர்களாக இருக்க வேண்டும். மாணவர்கள் என்பவர்கள் அனைவரும் ஒரே மனநிலையுடன் பாடசாலைக்கு சமுகம் தருவது கிடையாது. மகிழ்ச்சியான மனநிலையில் பாடசாலைக்கு வரும் மாணவர்கள் இருப்பது போல் உளநெறுக்கீடுகளுக்கு உட்பட்ட நிலையில் பாடசாலைக்கு வரும் மாணவர்களும் ஏராளமானவர்கள் காணப்படுகின்றனர். குடும்பச் சூழல் சார்பான பிரச்சினைகள், பொருளாதார ரீதியான பிரச்சினைகள், நோய் நிலைமைகள் என்பன இதற்குப் பின்னணிக் காரணங்களாக அமையலாம். எனவே ஒரு வெற்றிகரமான ஆசிரியர் இம்மானவர்களை சரியாக இனம் கண்டு அவர்களுக்கு ஏற்ற விதத்தில் சிறந்த வழிகாட்டல்களை வழங்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.



அதேபோல் ஒரு ஆசிரியர் எப்போதும் போதனா இலக்குகள், குறிக்கோள்களை விளங்கி அதற்கேற்ற விதத்தில் தனது போதனையை வடிவமைத்து கொள்பவராக காணப்படுவர். மாணவர்களை

ஆக்கபூர்வமான சிந்தனையாளர்களாக மாற்றுவதற்கும் அவர்களை முன்னேற்றுவதற்கும் உரிய சூழலை உருவாக்குவதற்கு பல்வேறு வகையான போதனா அணுகுமுறைகளை பயன்படுத்துவர். போதனா வினைத்திறன் பற்றி நோக்கும் போது மூன்று முக்கிய வகிபாகங்கள் கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

***1. கடத்தல் வகிபாகம்***

***2. கொடுக்கல் வாங்கல் வகிபாகம்***

***3. நிலை மாற்று வகிபாகம்***

இம்மூன்று அம்சங்களிலும் நிலை மாற்று வகிபாகம் மிகவும் முக்கியமான ஒன்றாகும். காரணம் இன்றைய கல்விச் சமூகம் எதிர்பார்க்கும் தேர்ச்சியினை மாணவர்களிடையே ஏற்படுத்துவதற்கும் நவீன மற்றும் பின்னவீனத்துவ தேவைகளை நிறைவு செய்வதற்கும் நிலைமாற்று வகிபாகம் முக்கியத்துவம் உடையதாகும். எனவே எதிர்கால தேவைகளை நிறைவு செய்யும் வகையிலான மாணவர் சமுதாயத்தை உருவாக்கும் பாரிய பொறுப்பை ஏற்றுள்ள ஆசிரியர்கள் புதிய நிலைமாற்று வகிபாகத்தை நன்கு விளங்கி அதனை வெற்றிகரமாகக் கொண்டு நடத்துவதற்கு தமது போதனா வினைத்திறனை விருத்தி செய்வது அவசியம் .

அதேபோல் ஒரு வெற்றிகரமான ஆசிரியரிடம் காணப்படும் பிறிதொரு முக்கிய பண்பு அவர் ஒரு சிறந்த ஆலோசகராக, உளவளத் துணையாளராக செயல்படலாகும். அதாவது பாடசாலைக்கு வரும் பிள்ளைகள் எப்போதும் ஒரு பெரியவரில் தங்கி இருப்பவர்கள் ஆவர். பெரும்பாலும் இவர்கள் பெற்றோரின் அன்பையும், அரவணைப்பையும் ஆதரவையும் நாடி நிற்பவர்கள். எனினும் தம் வாழ்வில் எதிர்கொள்ளும் ஒரு சில சவால்களை அல்லது சிக்கல்களை பெற்றோரிடமோ உறவினரிடமோ பகிர்ந்து கொள்ள விரும்ப மாட்டார்கள்.

சில வேளை சில மாணவர்களுக்கு தமது பிரச்சினைகளை பகிர்ந்து கொள்ள பொருத்தமான நபர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். உளநெறுக்கீடுகளால் பாதிக்கப்படும் ஒரு சில மாணவர்கள் அதனை பகிர்ந்து கொள்ள யாரும் இன்றி தனக்குத்தானே துன்பப்பட்டு தற்கொலை போன்ற தவறான முடிவுகளை எடுக்கக்கூட தயங்காத நிலைக்கு மாறி விடுகின்றனர். இத்தகைய நிலையில் ஒரு ஆசிரியர் தன்னிடம் கற்கும் மாணவர்களிடம் நெருங்கி பழகும் போதே குறித்த மாணவர்களை இலகுவாக இனங்காணக் கூடியவராக இருக்க முடியும். தமது பிரச்சினைகளை ஆசிரியருடன் பகிர்ந்து கொள்ள மாணவர்களை தூண்ட வேண்டும். இந்நிலையில் வெற்றிகரமான ஒரு ஆசிரியர் எப்போதும் இத்தகைய நிலைமைகளை வெற்றிகரமாகவும் விவேகமாகவும் அணுகக் கூடியவராக இருந்து குறித்த மாணவர்களின் பிரச்சனைக்கு தீர்வுகளை வழங்கக்கூடியவர்களாக தேவையான ஆலோசனை வழிகாட்டல்களை வழங்கக் கூடியவராக மாற வேண்டும். ஒரு ஆசிரியர் இவ்வாறு செயல்படும் போது உள நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள ஏராளமான மாணவர்களின் தனிப்பட்ட பிரச்சினைகள் தீர்ந்துவிடும். அவர்களின் சிறந்த எதிர்காலத்திற்கு இது ஒரு அடித்தளமாக அமையும்.

ஒரு வெற்றிகரமான ஆசிரியரின் பிறிதொரு முக்கிய பண்பாக பொறுமை, நிதானம் தூரநோக்குடன் செயல்படும் தன்மை என்பவற்றை குறிப்பிட முடியும். அதாவது ஒரு ஆசிரியரை பொறுத்தவரை இரண்டு தளங்களில் பணிபுரிபவர் ஆவார்.

மாணவர்களுடனான இடைவினையைப் போலவே முகாமைத்துவத்துடனான இடைவினைக்கும் உட்பட்டவராகவே ஒரு

ஆசிரியர் செயல்பட வேண்டி இருக்கிறார். பாடசாலை முகாமைத்துவத்தை பொருத்தவரை ஆசிரியர்களின் பங்களிப்பே முகாமைத்துவத்தின் வெற்றியையும் தோல்வியையும் தீர்மாணிக்கும் காரணி எனலாம். பாடசாலை முகாமை துவத்துடன் ஒரு ஆசிரியர் முரண்பட்ட போக்கை கையாளும் போது பாடசாலையில் ஒரு ஆரோக்கியமற்ற சூழல் உருவாகும்.

இதனால் மாணவர்களின் எதிர்கால கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு முழுச் சமுதாயத்திற்கும் இது பாதிப்பை ஏற்படுத்தும். வெற்றிகரமான ஒரு ஆசிரியர் ஒருபோதும் இத்தகைய ஒரு நிலைக்கு அடித்தளம் இடமாட்டார். பாடசாலை வளாகத்திற்கும் தனக்கும் ஏற்படும் எந்த ஒரு பிரச்சினையையும் சவாலையும் விவேகமாக எதிர்கொண்டு அதன் மூலம் தனக்கும் பாடசாலை சமூகத்திற்கு மாணவர்களுக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படா வண்ணம் எவ்வாறு பாதுகாக்கலாம் என்பதை எப்போதும் சிந்திப்பார். அவ்வாறு தூரநோக்குடன் சிந்தித்து நிதானமாக செயல்பட்டு முன்மாதிரிமிக்க சமுதாயம் ஒன்றைக் கட்டி எழுப்ப பாடுபடுவார்.


அதேபோல் வெற்றிகரமான ஒரு ஆசிரியர் எப்போதும் நேர முகாமைத்துவம் பேணக்கூடியவராக விளங்குவார். அதாவது பாடசாலைக்கு உரிய நேரத்திற்கு சமுகமளித்தல், உரிய நேரத்திற்கு தன் பணிகளை முன்னெடுத்தல், பாடத்திட்டங்களை உரிய நேரத்துக்கு முடித்தல் போன்ற தன் பணியுடன் தொடர்புபட்ட அனைத்து காரியங்களையும் ஒரு நேர முகாமைத்துவத்தின் கீழ் மேற்கொள்வார்.

அத்தோடு நின்று விடாது தன்னிடம் கற்கும் மாணவர்களுக்கும் சிறு வயது முதலே நேர முகாமைத்துவத்தின் அவசியத்தையும் அதற்கான வழிமுறைகளையும் பயிற்றுவிப்பார். நேர முகாமைத்துவத்தை சரியாகப் பேணும் ஒருவர் எப்போதும் தான் சார்ந்து உள்ளவர்களையும் அதற்கேற்ப வழி நடத்துவதில் வெற்றி பெறுவார்.

எனவே ஒரு சிறந்த வினைத்திறன் மிக்க சமுதாயம் ஒன்றை கட்டியெழுப்ப முனையும் ஆசிரியர்கள் எப்போதும் தன்னைத்தானே வளப்படுத்திக் கொள்பவராக இருக்க வேண்டும். காரணம் இற்றைப்படுத்தப்படாத தகவல்கள் இன்றைய வளர்ந்து வரும் இளம் சமுதாயத்தினருக்கு எந்த வகையிலும் பொருத்தம் அற்றது. பெற்றோருக்கு அடுத்தபடியாக பிள்ளைகளின் உள்ளங்கள் நாடும் முன்மாதிரிகள் ஆசிரியர்களே என்ற அடிப்படையில் பிள்ளைகளுக்கு சிறந்த முன்மாதிரியை வழங்கும் ஆசிரியர்களே வெற்றிகரமான ஆசிரியர்களாக கணிக்கப்படுவர்.

எனவே புனிதமான இந்த ஆசிரியப் பணியில் இணையும் அனைவரும் வெற்றிகரமான ஒரு ஆசிரியராக மாற முயற்சி செய்வோம்.





# கடமையிற் கவனமாயிரு

அதுவோர் அடர்ந்த வனம், தீப்பற்றி எரிகிறது....

அனல்தாங்க இயலாத வயிறுபெருத்த மான் ஒன்று மெதுமெதுவாய் வெளியாகி வந்து இடையில் திகைப்புடனே நிற்கிறது....

அங்கேயொரு வேடன் அம்பெய்ய மானைக் குறிவைத்து நிற்கின்றான்...

பயந்து ஓடவில்லை அந்த மான். அரவங் கேட்டு மறுபுறத்தே தலையைத்திருப்பிப் பார்த்தாலங்கு தன்மேலே பாயத் தயாராய்உறுமியபடி புலியொன்று அங்கே ஓடவில்லை அம்மான் அப்போதும் அசையாமல் நிற்கின்றது.

அங்கே வானும் வீழ்ந்துவிடத் தயார் நிலையில் பளிச்சிடும் மின்னலொளி, காதைக்கிழிக்கும் இடியினொலி.....

இவற்றினாலே தடுமாறிட்ட வேடனின் அம்பும் பாய்கின்றது புலியின் பக்கம் புலியின் அருகில் குத்திட்டு நின்ற அம்பினைக்கண்டு சினங்கொண்டு உறுமிக் கொண்டே எய்த அவனைத் துரத்துகின்றது..

மானின் எண்ணம் நீங்கிட அவனும் ஓட்டமெடுத்தான் தப்பிட எண்ணி தன்னைச்சூழ்ந்து பேராபத்துகள் இருக்கக்கண்ட மானோ தன்னைக் காத்துக் கொள்ள ஓடாததேன்....?

அது காத்திருந்தது குட்டி ஈண பிரசவ வலியில் இருந்ததனால் அசையாதிருந்தது மானும் அங்கு, பின்னால் காடு தீப்பற்றி எரிய ஒருபுறம் வேடன் குறியும் பார்க்க மறுபுறம் ஒரு புலி பாய முனைய அசையாதிருக்க காரணம் அதுவே....

பிரசவ வாடை புலியும் நுகர்ந்து தன்மேல் பாய்ந்து

குதறக்கூடா பத்திரமாக தனது குட்டியை ஈண்று விடுதலே தனக்கு முக்கியம் என்று அறிந்தே மானின் கவனம் முழுதும் அதிலே விட்டது.

ஆபத்து சூழ்ந்தும் கவனஞ் சிதறாது தன் கடமையுணர்ந்தே அசையாதிருந்தது மின்னலும் இடியும் ஒன்றே சேர ஆரம்பித்ததே பெருமழை பெய்ய பெருமழை கண்ட தீயும் அங்கு சடுதியாய் அணைந்தும் விட்டது

மானுக்கங்கே இனியென்ன தடையென எண்ணியதாலோ வலியும் உரத்து அது தன்குட்டியை பத்திரமாக ஈண்றும் ஏடுத்தது குட்டிக்கும்

தாய்க்கும் பெய்த மழைநீர் பெரிதும் உதவியது. அணைந்து ஓய்ந்த காட்டுக்குள் மீண்டும் தன்குட்டி தூக்கி மெதுவாய்ச்சென்றது.

இதில் பல பாடங்கள் நமக்கும் உண்டே கேட்பீர்.. எத்துயர் நேரினும் நமது கடமையில் கவனஞ் சிதறா பதறியோடாதிருந்து வென்ற மான்போல் நாமும் இருப்போம்.

எத்துயர் நேரினும் கடமையிற் கருத்தாய் இருந்திட்டாலே இயற்கையே வந்து தடைகளை நீக்கும் தடுமாறாதிருந்தால் இலக்கையும் அடையலாம்....

இயற்கையென்ன, செயற்கையென்ன எல்லாம் இறைவனின் செயல்கள்தானே.......

**அஹமது தாஹா ஏ இம்தியாஸ்.**
**ஹொரொவ்பொத்தான.**

# அடைக்கலம் தேடும் அன்றில்கள்



அல்லும் பகலும்
அயராதுழைத்து
செல்லமாய் வளர்த்த
பிள்ளை குட்டிக்காய்
உள்ளதையெல்லாம்
அள்ளிக்கொடுத்து விட்டு
இல்லடம் ஏதுமின்றி
ஏங்குதிங்கே அன்றில்கள்.

பருவத்தின் மாற்றம்
உருவத்தில் தோன்றும்
கருவறை உறவும்
கறையென நோக்கும்
தள்ளாத வயதில்
தளர்ந்த உடலும்
அல்லாடித் திரியும்
ஆனந்தம் அழியும்

பார்த்துப் பார்த்துப்
பரிவோடு வளர்த்து
பாசம் காட்டிய உறவுகள்
பாரபட்சம் காட்டும்
பத்து மாதங்களாய் வயிற்றில்
பத்திரமாய்க் காத்த தாய்
வெய்யிலில் வேகி
வியர்வையில் குளித்த தந்தை
பாரமாய்த் தெரியும்

திங்கள் தோறும்
தாய் ஒருபிள்ளையிடம்
தந்தை ஒரு பிள்ளையிடம்
அந்திமக் காலத்தில்
அன்பைத் தேடித்தேடி
அலைக்கழியும் அவலங்கள்
அன்றாடம் அரங்கேறும்.
மாடி மனையின்
கோடி முனையிலும்
அன்னை தந்தையர்
அவமானச் சின்னமாகும்

கடைசியில் காத்திட
காப்பகம் நாடி
கணவன் ஓரிடம்
மனைவி வேறிடம்
இருப்பிடம் மாறும்

விருத்தாப்பியம் விருத்தியுற
வயோதிபர் இல்லம்
வரமென வாய்க்கும்

அன்னம் தந்து
அடைக்கலம் தந்து
அன்பு பரிமாற
நண்பர்கள் தந்து
யாராரோ புண்ணியத்தில்
ஆயுளின் இறுதியை
ஆனந்தமாக்கும்
முதியோர் இல்லத்தில்
சோடியிழந்த ஒற்றைப் பறவைகள்
வாடித் தவிக்கும்
வலிகள் என்று மாறும்.?

**ஹாஜறா கலீலுர் ரஹ்மான்**
**காத்தான்குடி**

# அவள் எனும் நான்

சாதிக்க எண்ணம் கொண்டு இலக்கின் பின்னால் இடைவிடாது ஓடிய அவளின் சாதனைக்கு வேதனைகள் பல சோதனைகள் நடத்தின....

வாழ்க்கையில் எவர் கையும் தன் நம்பிக்கையாக வேண்டாம் என எண்ணம் கொண்ட அவளின் சாதனையை சிதைக்க வறுமை வாட்டியது, உறவுகள் தூற்றியது, பணமின்மை அவளை பந்தாடியது இருந்தாலும் எதிலும் ஆட்டம் கண்டுவிடவில்லை அவள்.....

பயணிக்கும் பாதையை கல்லினால் கட்டுப்படுத்தினாலும் முள்ளினால் முற்றுகையிட்டாலும் இலக்கிற்கு இடையில் வரும் இடர்கள் அவளை இடைநிறுத்திவிட முடியாது ஏனெனில் தடைக்கல்லாய் வரும் தடைகளை தகர்த்தெறிய தன்னம்பிக்கை கொண்டு விட்டாள்....

வேட்கை கொண்டிருக்கிறாள் வெற்றி வாகை சூட தாண்டிக் கொண்டே இருப்பாள் தடைகளை மட்டுமல்ல கூடவே அவளின் சாதனைகளின் உயரங்களையும்.....

எதிலும் சளைத்தவளல்ல அவள்..... சாதிக்க பிறந்த சாதனைப் பெண் அல்லவா? அவள்

அவள் எனும் நான்.....

**ஜெஎபர் சாஜிதா பர்வின்**
**தாமரைவில், கிண்ணியா**

# அருள்மறையாம் திருமறை

நேரிய வேதம் கற்பிக்கவே உத்தம தூதர் சமூகத்திற்கு ஒளிச்சுடராய் இறையோன் அளித்த அற்புத வரமே இந்தத் திருக்குர்ஆனாம் உன் வாழ்வு சீர்பெற்று

சுவனமதில் நீ நுழைய உன்னத வழிக்காட்டல் தான் - இந்த திருக்குர்ஆனாம்...

நீ விழித்திருக்கின்றாய்... ஆனால் உன்னைப் பின்பற்றி வாழ இன்னும் மானிடர் விழிக்கவில்லையே...

நீ உன்னை திறந்து வைத்திருக்கின்றாய்... ஆனால் உன்னை ஓதும் மனங்கள் இன்னும் திறக்கப்பட வேண்டுமே...

குர்ஆனின் பாதை தனில் நாமும் நடந்திடவே துன்பங்கள் விலகிடுமே இன்பங்கள் பெருகிடுமே...

எதனை நேசிக்கின்றாய் எதற்காய் முயற்சிக்கின்றாய் அத்துனையும் பாலாகிவிடும் மாமறையின் வழி இல்லையேல்

எதனைப் பெறுகின்றாய் எதனை இழக்கின்றாய் அத்துனையும் உனக்கென அல்லாஹ்வால் எழுதப்பட்டதே...

பாரினிலுள்ள பல பல காவியங்களும் உன் முன்னால் தோற்றே போகுமே...

உன்னை நாம் கண் திறந்து பார்க்கையில் எம் வாழ்க்கையை மெய் சிலிர்க்க வைக்கின்றாயே...

கண்முன்னே நீ இருக்க கண்மூடித்தனமாக வாழுகின்றது இந்த மானிட சமூகம்...

எனவே, உன் வாழ்க்கை பயணத்தை சீர் செய்திட இன்றே விரைந்திடு உன் மாமறையின் வழி பக்கம்...

**மிர்பத் ரிஸ்லின்**
**வெட்டாளை, புத்தளம்**

# தனித்துவம்

*இறை படைப்போ - ஓர் பெரும் அற்புதம் !
எங்கும் எதிலும் தனித்துவத்தின்
ஆதிக்கம் !*

*மற்றவர் வாழ்க்கையின் பிரதி -
முகமூடியாய்
உனக்கெதற்கு !
உனக்கேயான அடையாளங்களை
உருவாக்கு தைரியமாய் !*

*நேசிப்புக்கான ஏக்கங்களை களைத்தெறி !
உண்மை நேசமது - அக உணர்வின்
ஆத்மார்த்தமான தேடலின் வெளிப்பாடே !
அன்றி, புறத்தோற்றத்தில் அல்ல*

*பிறர் உன்னை இகழ்ந்து பேசினால் என்ன !
பொய்யாய்ப் புகழ்ந்து பேசினால் தான்
உனக்கென்ன !
உன் வெற்றிப் பாதையை செதுக்கும்
சிற்பி நீயல்லவா ! துணிவு கொள் !*

*விடா முயற்சியும் ஆர்வமும் ஒருசேர - நீ
செய்யும் காரியங்களெல்லாம் கைகூடுவது
நித்தம் !*

*உனக்காக மட்டுமே வாழ்ந்து மரிப்பதில்
என்ன ஆனந்தம் !
பிறரை வாழவைத்தோம் என்பதிலல்லவா
தீரா இன்பம் !*

*உனக்கான தனித்துவத்தை
அடையாளப்படுத்தும் நாளில் - சுதந்திரக்
காற்றை சுவாசிப்பாய் !
சமூகத்தின் மாய வலையைப் பிய்த்தெறிந்த
மனிதியாய் !*

***முர்ஷிதா இர்ஷாத்
மெல்சிரிபுர.***

# எனக்கொரு கனவு உண்டு

*எனக்கொரு கனவு உண்டு!
எழும்பிடும் மனதில் உருண்டு!
தினமொரு தேடல் கொண்டு
திரிவதால் நானும் வண்டு!*

*சிறுவனாய் இருந்த கன்று!
சூழன்றது ஆசை யொன்று!
பெருமித இளைஞன் என்று
பறந்ததென் மறைகள் கழன்று!*

*வரவிலா வாய்ப்பு தேடி
விளைந்தது ஒன்றும் இல்லை!
வரம் தரும் இறைவன் கூட
வாயிலை மூடி வைத்தான்!*

*கடந்தது ஆண்டு விரைந்து
கடினமாய் நானே முயன்றேன்!
தொடங்கினேன் ஏட்டை எடுத்து
துளிர்ந்தது பாட்டு எழுந்து!*

*திரளெனப் பாக்கள் வடித்தேன்!
தெரிந்தவர் தாளம் தந்தார்!
தரமான கருத்தை யுரைத்துத்
தகுதியை உயர்த்தி நின்றேன்!*

*புலனக்குழு வமைத்து எந்தன்
புரிதலைப் பெருக்க முனைந்தேன்!
பலனென ஏதும் பெற்று
பயனெதும் கிடைக்கக் காணேன்!*

*வருடமும் போட்டிப் போட்டு
வேகமாய் புரளக் கண்டேன்!
வருத்தமே காட்டா வண்ணம்
வசந்தமாய் வாழ்வை வென்றேன்!*

***கவிஞர் டாக்டர் சோமதேவன்,
சோமசன்மா, ஜொகூர்,
மலேசியா***

# பாடலில் ஒரு தேடல்

*நாற்று நடும் கிராமத்து குயில்கள்
நாவாடும் இசை மெட்டாக
உழவன் வாழ்வுபொங்கப் பாடும்
ஏலேலோ என்று பாட்டு இசைக்க
பாலாறு, தேனாறு, என பல ஆறுகள்
பல்லவி பாட மனிதம் புளிக்
காற்றுக் கூட அற்புதமாய் பாட்டு
கன்னித்தமிழ் தவழ்ந்து ஓடும்
பல காப்பியங்கள் வந்தது*

*பாடலில் மூலமாக பிறந்தது
அலை கடலுக்கு அப்பால்
கவிஞர்கள் ஒன்று திரண்டனர்
அனைத்தும் அடங்கி விடும்
ஏலோ ஏலோ ஏலோ
தமிழ் எழுத்துகள் ஓசை பெற
இசையாக, பண்ணாரி*

*பாடி வந்த எங்கள் தமிழச்சி
பாடு பொருள் நன்றாய் பெற
கவிஞர்கள் பாடினார்
நூலறிவு, பட்டறிவு,
அகிலமே போற்றும் இசையறிவு
கவலைகள் மறைத்திடும்
பாடலினால்*

***கவிஞர். பு. மகேந்திரன்
பி. ஏ, எம். காம். எம். பில். எம். பி. ஏ. ந
பிகெட்ச்டி (டாக்டர்)
அகர்சன்கலை துணைபேராசிரியர்***



# போரை நிறுத்து!

***(இளம்பிஞ்சின் இறுதி வரிகள்)***

*மகிழ்ச்சிமொழி கேட்டுத் தவழும் வயதில்...
மரணமொழி கேட்டு மாண்டது ஒரு சிசு...
கருவறையின் கதகதப்பை உணரும்
முன்பே...
கதிர்வீச்சின் பதைபதைப்பை பரிசளித்தது
யார் ?*

*வீசுகிறது குருதி கலந்த வாசம்...
சுவாசிக்கிறேன் முதல் முறையாக
காற்றில்...
என் அழுகை சத்தத்தை மிஞ்சிய கதறல்...
காதுகளை கவ்விய கன்னிவெடிகள் ...*

*மெல்ல கண் திறந்து பார்க்க... சிதைந்த
கட்டிடங்களுக்கிடையே நானும் என்தாயும்
பார்த்தது என்னவோ கண்ணீரோடு
கசிந்த...
தாயின் குருதி கோர முகத்தை
வானத்தில் வண்ண விளக்குகள் மிளிற...*

*கண்திறந்த அந்தநொடியோ
கண்மூடினேன்...
யுத்தத்தில் முத்தமிட்ட
குண்டு மழையால் ...*

*சிதைந்த அவ்வுயிரின் உள்ளத்தின்*
*உள்ளே...*
*புதைந்த கேள்விகள் எத்தனை*
*இருந்திருக்கும்?*

*பசியிலே வீறிட்டு அழுத தன்னை...*
*யாரும் பாராத துயர்சொல்லி*
*இருக்குமோ?*

*மாண்டு விட்ட தன் தாயை ...*
*விளையாட்டுத் துணையாக்க*
*எழுப்பகேட்டு இருக்குமோ?*

*ஓயாத குண்டு மழையிலே*
*அடிபட்டுகிடந்த...*
*தன்னைக் காப்பாற்ற யாரும் வராத*
*காரணம் தான் கேட்டிருக்குமோ?*

*கவலை வேண்டாம் வாழ்வின் வாசனை*
*அறியா இப்பிஞ்சு உள்ளம், எந்த*
*கேள்விகளையும் இனி நம்மை*
*கேட்கப் போவதில்லை..*

*உள்ளத்தின் உறுத்தலையும் எளிதாய்*
*கடந்துபோக, "நம்மால் என்ன செய்ய*
*முடியும்?" என்ற*
*அற்புத காரணம் தான்*
*நம் கையில் உண்டே...*

*சலனமின்றி நிச்சயம் நம்மை நாம்*
*தினமும் ஏமாற்றிக் கொள்ளலாம்*
*"நாம் மனிதர்கள் தான்" என்று......*

**கவிதாயினி. அ.அபிபெல்வியா**
*முனைவர் பட்ட ஆய்வு மாணவி,*
*இயற்பியல் துறை,*
*அரசினர் ஆடவர் கலைக்கல்லூரி,*
*நந்தனம் சென்னை-35*

# என்னமோ நடக்குது

*என்னமோ நடக்குது நாட்டில*
*அதச் சொல்லவே முடியல பாட்டில*
*நீதியும் இருக்குது ஏட்டில*
*நீதியக் கேட்டாக் கூட்டில .......*

*ஏழைங்க வாழ்வு ரோட்டில*
*மிருகங்கள் வாழும் நாட்டில*
*உலகம் சுழலுது நோட்டில*
*நிம்மதி இல்லையே வீட்டில .....*

*திருடிய பணத்தின் கட்டில*
*திரும்பக் கொடுக்க மனசில்ல*
*பதவி மோகக் கட்டில*
*விட்டுக் கொடுக்கவும் துப்பில்ல - ....*

*இனத்துக்கு இடையே மோதல*
*தூண்டுதல் நேரிய வழியில்ல*
*ஆளும் சபைக்கும் அறிவில்ல*
*ஆணவம் இன்னும் குறையல்ல - .....*

*விலைகள் குறைய வாய்ப்பில்ல*
*நாடுகள் விலகுதல் வியப்பில்ல*
*அடிமை விலங்குகள் உடையல்ல*
*ஊழல் நடக்கத் தடையில்ல - ......*

*படித்தவர் நிலையோ உயரல்ல*
*சம்பளம் செலவுக்கும் போதல்ல*
*போராடிப் பார்க்கவும் வழியில்ல*
*படைகள் அடிக்கும் தலயில ......*

*செல்வம் நிறைந்த மண்ணில*
*சேர்ந்து உயர்த்தப் புறிவில்ல*
*மனிதர்கள் நெஞ்சில் நெறியில்ல*
*மாறும் வரையில் விடிவில்ல ....*

***கிழக்கு வானம்***




# மல்வானை அல் முபாரக் தேசிய பாடசாலை அறிமுகம்

வரலாறு என்றாலே பல யுகங்களை கடந்து வந்த சரித்திரம். அதிலும் பாடசாலை வரலாறு என்றால் எண்ணிலடங்கா சாதனைகளை காணலாம்.

மேல் மாகாணம் கம்பஹா மாவட்டத்தில் தேனமுத ரம்புட்டான் பிரசித்தி பெற்ற இடமான மல்வானை ஊரினிலே அல் முபாரக் தேசிய பாடசாலை வீற்றிருக்கிறது. இப் பாடசாலையின் தற்போதைய அதிபர் S.H.M Naeem அவர்கள் ஆவார்.

நூற்றாண்டை கடந்த பாரிய வரலாற்றை தன் முதுகில் சுமந்து கொண்டிருக்கிறது. 1915ம் ஆண்டுகளில் இலங்கை வரலாற்றில் மிகப்பெரும் கலவரம் ஏற்படுகிறது. மத்திய மலை நாட்டை மையப்படுத்தினாலும் மேற்கில் உள்ள மல்வானையிலும் அதன் தாக்கம் இருந்தது. மக்கள் அச்ச உணர்வுடன் வாழ தலைப்பட்டனர். இச்சந்தர்ப்பத்தில் தான் இங்கு வாழ்ந்த பெரும் வர்த்தகர், செல்வந்தர், அரசியல் சமூக உணர்வு கொண்டவர் மர்ஹூம் அல்ஹாஜ் A.L.M. ஸாலி அவர்கள் ஆங்கில நிர்வாகிகளுடன் கலந்துரையாடி மக்களுக்கு அச்சமற்ற ஒரு நிலையை ஏற்படுத்துமாறு வேண்டினார்.

இந்நிலையில் தான் கொழும்பில் எகிப்தில் இருந்து நாடுகடத்தப்பட்ட ஒராபி பாஷாவின்






சமய கல்வி கலாசார மறுமலர்ச்சி சிந்தனை மற்றும் பேரறிஞர் சித்தி லெப்பையின் முயற்சியால் ஏற்பட்ட அறிவுத்தாகம் காற்றில் கலந்து இங்கும் வீசத்தொடங்கியது. அந்த சந்தர்ப்பத்தில் தான் கொழும்பு முஸ்லிம்களின் தலைமைகளாக இயங்கிய அல்ஹாஜ் ஸலாஹூத் தீன், மர்ஹூம் அப்துல் காதர் போன்றோரின் தொடர்பும் நெருக்கமும் காரணமாக தனக்குள் இருந்த தளராத எண்ணம் செயலாக வெளிவந்தது.

அப்போதைய மேல்மாகாண அரசாங்க அதிபராக கடமையில் இருந்த J.G.Feroze உரையாடி ஊரின் மத்தியில் 1 ½ ஏக்கர் காணியை பெற்று "60 X 20" அளவு கொண்ட கட்டடமொன்றை ஊரில் உள்ள பிரமுகர்கள் முக்கியஸ்தர்கள் எல்லோருமாக இணைந்து கட்டி அரசிடம் கையளித்தனர்.

அதுதான் மேல்மாகாண அரசாங்க அதிபராக கடமையில் இருந்த J.G.Feroze தலைமையில் 1922 ம் ஆண்டு ஜனவரி 1ம் திகதி முல்லை தீவை சேர்ந்த திரு. யு. எட்வர்ட் அவர்களை முதல் அதிபராக கொண்ட "வள்கம அரசாங்க தமிழ்ப்பாடசாலை என ஆரம்பிக்கப்பட்ட இன்றைய அல்முபாரக் தேசிய பாடசாலை (SUPER 1AB) அதன் முதல் மாணவராக மர்ஹூம் O.L.முஹம்மத் முஹிதீன் காணப்பட்டார். முதலாவது உதவி ஆசிரியராக N.M.பேதுரு பிள்ளை நியமிக்கப்பட்டார்.




அப்போது தமிழ் மொழி பிரிவை கொண்டு ஆண் மாணவர்களை மாத்திரம் கொண்டே

பாடசாலை காணப்பட்டது. இருப்பினும் பெண் மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்தவே 1950ம் ஆண்டு பாடசாலை கலவன் பாடசாலையாக மாற்றப்பட்டது. முதல் பெண் ஆசிரியையாக திருமதி. கே.செல்வநாயகம் நியமனம் பெற்றார்.



1963ம் ஆண்டு பாடசாலை மகா வித்யியாலயமாக முன்னேற்றம் பெற்று 1967ம் ஆண்டு கா.பொ.தா உயர்தர கலைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. இதன் பின்னரான காலப் பகுதியில் தேசத்தின் பல பகுதிகளிலிருந்து கல்வியை பெறுவதற்காய் வண்டுகளுக்கு ஒத்ததாய் மாணவர்கள் வருகை தந்தனர். இதன் விளைவால் பாடசாலை 1980ம் ஆண்டு மத்திய கல்லூரியாய் தரம் உயர்த்தப்பட்டு 1981ம் ஆண்டு கா.பொ.தா உயர்தர விஞ்ஞான பிரிவு ஆரம்பிப்பதற்காய் அனுமதி வழங்கப்பட்டது. அதுவரை காலமும் தரம் 1 தொடக்கம் 13 வரையாக காணப்பட்ட பாடசாலை தரம் 1 தொடக்கம் 5 வரையான ஆரம்பப்பிரிவு அல் முபாரக் கனிஷ்ட வித்தியாலயம் 1991ம் ஆண்டு அதிபர் M.H.A.M.முக்தார் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.



1998ம் ஆண்டு தேசிய பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டு ஆரம்பத்தில் இருந்தே காணப்பட்ட தமிழ் பிரிவுடன் இணைந்து 2006ம் ஆண்டு ஆங்கிள பிரிவும் ஆரம்பிக்கப்பட்டது. 2013ம் ஆண்டு உயர்தர தொழினுட்பப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு பாடசாலை 1AB (S) ஆக தரம் உயர்த்தப்பட்டது. 2016ம் ஆண்டு "லங்கம பாசல ஹொந்தம பாசல" திட்டத்தில் உள்வாங்கப்பட்டது. 2017ம் ஆண்டு கல்வி அமைச்சால் புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டு 2019ம் ஆண்டு அத் தொழினுட்ப கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது. 2022ம் ஆண்டு தனது நூற்றாண்டுக்கான அங்குரார்ப்பண விழா வெகு விமர்சையாய் கொண்டாடப்பட்டது.

இவ்வாறு எண்ணிலடங்கா சாதனைகளை புரிந்த வீர பயணத்தினிலே தன் பிள்ளைகளாய் ஆசிரியர்கள், வைத்தியர்கள், சட்ட நிபுணர்கள் என நம் தேசத்திலும் ஏன் உலகிலும் பல பட்டதாரிகள் வாழ்ந்து வருகின்றனர் இன்னும் பலர் மண்ணரை வாழ்வினில் உள்ளனர். புத்தகத்தை மாத்திரம் வைத்து அறிவை மாணவர்களுக்கு கொடுக்காமல் கலை பிரிவிலும் அறிவை வளர்த்து வந்துள்ளனர். இதற்கு சான்றாக பாடசாலை மாணவர்கள் வலய மட்டம், மாகாண மட்டம், தேசிய மட்டம் என பல சாதனைகளை புரிந்ததுடன், சாதனை புரிந்த மாணவர்களை பாராட்டி அவர்களை ஊக்கப்படுத்தி மற்றைய மாணவர்களை சாதனை புரிவதற்காய் தூண்டியுள்ளனர்.

இன்னும் பாடசாலையில் கா.பொ.தா சாதாரணதர மற்றும் கா.பொ.தா உயர்தர பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளை மாணவர்கள் பெற்று வந்துள்ளனர். மேலும் சில மாணவர்கள் அவர்களின் தனித்திறமையில் பல சாதனைகளை புரிந்து வருகின்றனர்.

ஆரம்பத்தில் குறிப்பிட்ட மாணவர்களையும் ஆசிரியர்களையும் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையில் இன்று சுமார் 75 ஆசிரியர்களையும் 1250

மாணவர்களையும் கொண்டு தன் கல்வி பயணத்தை தொடர்ந்து செல்கிறது.

இன்று இப் பாடசாலையானது இவ்வாறான பல சாதனைகளை புரிய பாடசாலை ஆரம்பம் தொடக்கம் இன்று வரை உள்ள அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு, பாடசாலை நலன்பரி சங்கம், பாடசாலை பழைய மாணவர் சங்கம், பெற்றோர்கள் மற்றும் முக்கியமாய் மாணவர்கள் என்று ஒரு சமூகம் அறிவுக்காய் கொடுத்த தாக்கத்தின் விளைவே இப் பாடசாலையின் பாரிய வெற்றியாகும்.



நூற்றாண்டினில் தடம் பதித்த பாடசாலை இன்றும் தன் வெற்றி பயணத்தினிலே வீரு கொண்டு சீயமாய் துணிவுடன் பயணிக்கிறது. மாரை உயர்த்தியே தன் சாதனையை தொடர்கிறது.

**நிஜத்தின் நிழல்**
**நுஹா ஹூஸைன்.**
*(அல் முபாரக் தேசிய பாடசாலையில் தரம் 11இல் கல்வி பயிலும் மாணவி)*



# எப்போது விடியும்

வளமான வாழ்வை தேடி – தினம்
வண்ண வண்ண எதிர்பார்ப்புடனே
வகை மோசம் செய்தாரை மன்னித்து
வளமாக தேடுகிறேன் – வாழ்வை.

சுளை சுளையாய் பணம் இருந்தும்
சுகபோக வாழ்வியலில்
சுகபோசனம் தேடுகிறேன்
சுடர்விடத்தான் வேண்டுகிறேன்.

தாய் நாட்டை அடகு வைத்து
அயல் நாட்டில் கை யேந்தி
அடுப்பெரிய வைத்தவர்கள்– அவர்கள்
பசியோடு தடுமாற வைத்தனரே.

ஊண் இன்றி உறக்கமின்றி
உலாவிட எரி பொருளின்றி
அரை வயிற்று பசியோடு
வரிசையிலே கொன்றனரே,

இத்தனையும் மாறிடவே
விடியலை நான் தேடுகிறேன்
சுதந்திரத்தை வேண்டுகிறேன்
அனியாய அரசினரின்
விடிவைத்தான் இயம்புகிறேன்.

**கவிப்பொய்கை**
**ஜவ்சன் அஹமட்**

# அவனின் அவளின் தொடர்...

பெண்கள் மட்டும் விதிவிலக்கு இல்லை ஏதோ ஒரு ஆணின் விலா எலும்பில் பெண் படைக்கப்பட்டால் அதன் தொடர்ச்சியாகவே ஒரு கருவிலிருந்து ஒரு குழந்தை ஆணாகவோ பெண்ணாகவோ மாறுகிறது இதனை இறைவன் ஒருவனே அறிவான்.


அந்த ஒரு ஆண் ஒரு பெண்ணை மதித்தாலும் அன்பால் பொழிந்தாலும் அந்த ஆணை ஏதோ ஒரு விதத்தில் தவறாகவே எண்ணுகிறனர்.

அந்த ஆணின் பாசத்தை அந்த நேசத்தை தவறாகவே பயன்படுத்துகின்றனர். ஏதோவொரு விதத்திலும் சரி அவனை காயப்படுத்தி பார்க்கின்றனர்.

இவ்வாறு ஒரு பெண்ணானவள் அந்த ஆணின் மனதை காயப்படுத்திக் கொண்டே இருக்கிறாள் இப்படிப்பட்ட பெண்களும் இவ்வுலகில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

இவ்வாறான பெண்களுக்கான ஒரு பதிவே இது,

பெண்ணே மறந்து விடாதே! நீயும் பிறக்கும் போதும் அல்லது இறக்கும் வரையும் உனது பாதையில் ஏதோ ஒரு விதத்தில் ஆண் என்பவனை நீ சந்தித்தே ஆக வேண்டும்.



ஒரு தந்தையாக, அண்ணனாக, தம்பியாக, நண்பனாக, கணவனாக, என உறவுகளாக இல்லையேல் யாரோ ஒருவராகவோ சந்தித்திடவே நேரும். அது நியதியடி கண்ணே..

அப்படி இருக்க உனக்கு எவ்வாறு மரியாதை கொடுக்க வேண்டுமோ அவ்வாறு முழு மரியாதையைக் கொடுத்து, உன்னோடு அன்பைப் பொழிந்து காதலால், அன்பால், பாசத்தால், குடும்பம் உறவு என

அனைத்தையும் உனக்காகவே அவன் தேடிக்கொண்டிருக்கிறான்.

உன்னோடு வா(ழும்)ழ்ந்த அவனை அழிக்க, தாழ்த்த நினைக்கிறாய். அந்த அவனை நீ தூற்ற நினைக்கிறாய், முன்னேற தடுக்க நினைக்கிறாய்,
ஏதோவொரு காரணத்திற்காக பழிவாங்கவும் துடிக்கிறாய்..

அந்த அவனுகளுக்கான மரியாதையை உன்னால் ஏன் கொடுக்க முடியவில்லை?

உன்னுடைய உயிரிலிருந்தே அவன் பிறக்கிறான் அப்படிப்பட்ட அவனை உன்னால் எப்படி ஏமாற்ற முடிகிறது?

அப்படி இருந்தும் உன்னால் எப்படி அவனுக்கு துரோகம் நினைக்கத் தோன்றுகிறது?

அப்படி எண்ணும் அவனை எப்படி உன்னால் குடும்பத்திடமிருந்து பிரிக்க முடிகிறது? அப்படி எண்ணும் அவனை எப்படி உன்னால் புண்படுத்த முடிகிறது? அப்படி எண்ணும் அவனை எப்படி உன்னால் தூக்கி எறிய தோன்றுகிறது?

ஒரு பெண் ஒரு ஆணின் தயவில் அவனின் அவளாகவே வாழ்கிறாள்
அப்படியிருக்க பிறப்பிலிருந்து இறப்பு வரை அவன் தயவில் வாழும் நீ நன்றி என்ற நிலையால் செயற்படுகிறாயா? சற்று சிந்தித்துப் பார்!

உன்னைப்பற்றி நீ அறிய வேண்டுமானால் உன்னை தோளில் சுமந்தவனிடம் கேட்க வேண்டும்.
உன்னைப்பற்றி நீ அறிய வேண்டுமானால் உன்னவனிடம் கேட்க வேண்டும்.
உன்னை பற்றி நீ அறிய வேண்டுமானால் உன்னோடு பிறந்தவனிம் கேட்க வேண்டும்.

உன்னைப் பற்றி நீ அறிய வேண்டுமானால் நீ சுமந்து பெற்று வளர்த்தவனிடம் கேட்க வேண்டும்.

உன்னை பற்றி நீ அறிய வேண்டுமானால் உன்னோடு உன் கனா காலங்களில் பழகியவனிடம் கேட்க வேண்டும்.

இவ்வாறு ஏதோ ஒரு விதத்தில் ஒரு ஆணில் அந்த பெண்மை என்பது அவனோடு இணைந்து விடுகிறது. இணைந்திருக்கும் உயிரை பிரிப்பது எப்படி கடினமோ அவ்வாறே இவ்வுறவுகளும்.

ஒரு ஆணானவன் தனது உடல் பலம் அடைந்தவனாக இருப்பது போன்று மனதளவில் அவனில்லை. துன்பங்கள் அவனுள் இருந்தும் அதனை வெளிக்காட்ட தெரியாமல்
தாய்மடி,
தனது மனைவி,
தனது மகள்,
தனது
சகோதரி...என்று தனக்கானவர்களிடம் அவனது மனதில் உள்ளவற்றை கொட்டி விடுகிறான் அப்படி இருக்க உன் பெண்மை அந்த ஆண்மையைக் தவறாக எண்ணுவது நியாயமா?

உன் பார்வையில் ஏதோவொரு சந்தர்ப்பத்தில் அவனது செயற்பாடுகளிலோ, வாழ்நாள்களிலோ, ஏதோ ஒரு ஆணின் தவறான எண்ணங்கள், தவறான பார்வைகளை, தவறான நடத்தைகளை கொண்டு பாதிப்படைந்து இருக்கலாம் ஆனால், எல்லா விதத்திலும் அவனே காரணம் என முழுமையாக கூறிவிட முடியாது.

மனித உயிர்தான் அவனும் தனது உணர்ச்சிகளை ஏதோ ஒரு விதத்தில் கட்டுப்படுத்தவே நினைக்கிறான் ஒரு பெண்ணால் முடிந்த அளவு ஒரு ஆணால் முடிவதில்லை இது உச்சகட்ட புலம்பல் ஆகவே, அவன் வெளிக்காட்ட முடியாத அந்த மன ஆதங்கங்களை எவ்வாறு தீர்ப்பது என்று தெரியாமலேயே பல விதத்தில் அவன் வெளிக்காட்டுகிறான்.

*முழுமையாக ஆண்வர்க்கத்தையே தவறு என குறிப்பிட முடியாது ஏதோ ஒரு விதத்தில் ஒரு சில தவறான ஆண்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அவ்வாறு ஏதோ ஒரு விதத்தில் தவறான பெண்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.*

*கலி கால உலகமப்பா இது... தனது தந்தையே தன் முதல் ஆணாக அவள் பார்க்கிறாள் அவரின் ஒழுக்கம் தான் அவளில் சில மாற்றமதனை உணர்கிறாள். அவனின் ஒரு செயற்பாடு ஒவ்வொன்றும் பார்த்து பழகி அறிந்த எடுத்த பின்னரே தனது வழியில் வரும் ஒவ்வொரு ஆணின் செயலையும் அவளும் பார்த்து உணர்கிறாள். அதேபோல்தான் அந்த அவனானவன் தனது தாயைப் பார்த்து புரிந்து பழகி தன்னோடு பிறந்தவள், தனக்காக பிறந்தவள், தன்னில் பிறந்தவள் என ஒவ்வொரு பெண்மணியை பற்றி அறிய அவன் முழுமையாக முயற்சிக்க ஒரே ஒரு காரணம் தான் வா(மும்)ழ்ந்த சூழல்.*

*தனக்கு எவ்வாறு அமைகிறது? பிறர் சூழலையும் அவள் புரிந்து கொள்வாளா? எவ்வாறு அவள் வாழ்கிறாள்? என அவளின் உள்ளே அவன் வாழ அவளை முழுமையாக தெரிந்து கொள்ள கஷ்டப்படுகிறான். இந்த அவனின் அருமை புரிந்தாலே பாதி அவள்களுக்கு அவன் முழுமையான கிடைப்பான். அதுபோல் அவன் அவளை புரிந்தாலே அந்த முழுமையான அவளும் கிடைப்பாள்.*

*அவனில் அவளை புரிந்து நாம் செய்யப்படுவோம்.*

***பாத்திமா சம்சுடீன்***
***ஆசிரியர் குழு உறுப்பினர்***

# பட்ட மரம்

*கிளைகள் பரப்பி வளர்ந்த போது*
*பறவைகள் வந்து இளைப்பாறின*
*கனிகளோடு இருந்த வேளை*
*கிளிகள் வந்து பசியாறின...*

*கம்பீரமாய் காட்சியளித்த போது*
*காகங்களும் வந்து கூடுகட்டின*
*காற்று மழை வந்தபோது*
*பட்சிகளும் ஒதுங்கின..*

*வெப்பம் அதிகமானபோது*
*விரிந்த குடையாய் பலருக்கும்*
*நிழலானேன் இனிப்பான கனிகளை*
*இயன்றவரை கொடுத்தேன்..*

*வீதியின் ஓரத்திலே நான்*
*விருட்சமாய் இருந்ததால்*
*பாதசாரிகளும் என்னோடு*
*பழக்கமானார்கள்...*

*நாட்டு நடப்புக்களையும்*
*நல்லது கெட்டதையும் நாலுபேர் சேர்ந்து*
*எனக்குக்கீழே மாநாடு நடத்துவார்கள்...*

*திடீரென்று ஒருநாள்*
*பலத்தகாற்றில் நான்*
*கிளைகளை இழந்தேன்*
*நல்ல வேளை*
*வேரோடு சாயவில்லை...*

*பலமாய் இருந்த கிளைகள்*
*என்னை விட்டகன்றன*
*வேர்மட்டும் என்னோடு*
*விடாப்பிடியாய் இருந்தது...*

*இருந்தும் என்ன பயன்*
*இப்போது நான் பட்டமரம்*
*கிளைகளும் இல்லை*
*கனிகளும் இல்லை*
*பறவைகள் இல்லை*
*பாதசாரிகளும் இல்லை....*

*பட்டமரமாய் பார்ப்பவர் நகைக்கும் வண்ணம்*
*பாதை ஓரத்தில் இப்போ*
*பரிதாபமாய் நிற்கிறேன்....*

***இந்ரன் மங்கேஷ்***




# ஆளுமை பெண்மணி திருமதி விமலாதேவியுடைய அறிமுகம்

திருமதி. விமலாதேவி சிவநேசன் நெதர்லாந்து (ஐரோப்பாக் கண்டத்தில் உள்ள ஒரு சிறிய நாடு நெதர்லாந்து இது முன்னர் ஒல்லாந்து என்று அழைக்கப்பட்டது) இயற்கை வளங்கள் நிறைந்து அழகு செய்த இந்து சமுத்திரத்தின் முத்தாக மின்னிய ஈழம் தாயகம் கடலழகும் கலையழகும் மலரழகும் மண்ணழகும் போட்டிபோட்டு அழகு செய்யும் பலாலி என்ற பதியிலே இறை நம்பிக்கையும் நல்லொழுக்கமும் நிறைந்த இந்து சமய பண்பாடுமிக்க குடும்பத்தில் பெண்ணாகப் பிறந்தார்.

பிறந்த இடம் கிராமம் என்றாலும் குடும்பத்தவர்களின் முற்போக்கு சிந்தையால் கல்விகற்கும் வாய்ப்பு கிடைத்தது. மாணவப் பருவத்தில் இருந்தே



பேச்சுப்போட்டி, கவிதைப்போட்டி, நடனப்போட்டி, நாடகப்போட்டி என்று எல்லாத் திறமைகளையும் வெளிக்காட்டும் முதல் மாணவியாக வலம் வந்தார். ஆசிரியர்கள் அனைவரிடமுமிருந்து பாராட்டுப் பெற்றிருந்தார்.

இறுதிப் பரீட்சை எடுக்கும் நேரத்தில் இலங்கையில் இனக்கலவரம் தொடங்கியதால் இவர் ஊரான பலாலியிலே மிகப்பெரிய இராணுவ முகாமும் விமான நிலையமும் அமைந்திருந்ததனால் இவர்கள் எல்லோரும் சொல்லிலடங்கா துயரடைந்தார்கள். சிறுவயதில் தந்தையை பறிகொடுத்தார். அவர் பல சிரமங்களைத் தாண்டி விமானத் தாக்குதல்கள் பீரங்கித் தாக்குதல்கள் இராணுவத்தின் சுற்றிவளைப்புக்கள் ஊரடங்குச் சட்டங்கள் மின்சாரம் இன்மை உணவுத்தட்டுப்பாடு அத்தனையையும் எதிர்கொண்டு பரீட்சை எழுதி அதில் சித்திகண்டு ஒரு விஞ்ஞான கணித ஆசிரியராக நியமனம் பெற்றார்.

இனக்கலவரம் தொடர்துகொண்டே இருந்தது இவர் இவரது வீடுகளை விமான எரிகுண்டுத் தாக்குதலில் தீக்கு இரையாக கொடுத்துவிட்டு சொந்தமண்ணிலே அகதியானார் செய்வதறியாது திகைத்தார். ஒதுங்க இடமின்றித் தவித்தார். அவர் ஆசிரியராக இருந்தமையால் தந்தளித்துநின்ற அவரது குடும்பத்தையும் சிறியதாயார் குடும்பத்தையும் காப்பாற்றி வாழ வைக்க முடிந்தது.

எவ்வளவு துன்பம் துயரம் வந்த போதும் கல்வி மீது கொண்ட வேட்கை இவருக்கு தணியவில்லை அவர் ஆசிரியராக கடமையாற்றிக்கொண்டு அவரது பட்டப்படிப்பை யாழ் பல்கலைக்கழகத்தில் கற்றுமுடித்தார்.

கிட்டத்தட்ட பத்து ஆண்டுகள் விஞ்ஞான கணித சிறப்பு ஆசிரியராக கடமையாற்றினார். அவர் கற்ற அவரது பாடசாலையான யாழ் வயாவிளான் மத்தியகல்லூரியும் அவர் ஆசிரியராக கடமையாற்றிய யாழ் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியும் இவருக்கு இருகண்கள் போன்றன என இவர் கூறுகிறார். என் இரு தாய்க்கு நிகரானவை (எனக்கு கற்பித்த என்னோடு கற்பித்த ஆசிரியர்கள் நான் வெளிநாடு வந்த பின்னரும் இன்றுவரை தொடர்பில் இருந்து அன்பு பாராட்டி வருகின்றன இதை இங்கு குறிப்பிடுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்) பின்னர் திருமண பந்தத்தால் அவர் நெதர்லாந்தில் அவர் கணவரோடு வாழ தலைப்பட்டார் ஆனால் இந்த நாட்டில் அவரது ஆரம்ப நாட்கள் கண்ணைக்கட்டி காட்டில் விட்டதுபோல் இருந்ததாம் அந்த நாட்டு மொழியைத்தான் சொல்கிறார். அவர்கள் பேசிய மொழி நெதர்லாந்து (டச்சு) இவருக்கு அந்த மொழியில் ஒரு சொல்கூட தெரிந்ததாக இருக்கவில்லை அதன்பின்னர் அவர் ஆரம்பத்தில் இருந்து இந்த நாட்டு மொழியை கன்றுக்கொண்டார்.

அவரது மூன்று குழந்தைகளும் அங்குதான் பிறந்தார்களாம். குடும்ப, உறவுகள் யாருமற்ற வெளிநாட்டு வாழ்க்கையில் நண்பர்கள் மட்டுமே உறவினர்களாக அவர்களது நல்லது கெட்டது அனைத்திலும் ஒன்றாக நின்றார்களாம். ஆரம்ப காலத்தில் மிகவும் சொற்ப குடும்பங்களே இங்கிருந்ததால் அவர் வெளிநாடு வருவதற்கு பத்து ஆண்டுகளின் முன் வெளிநாடு வந்த அவரது கணவரும் அவர் போன்ற இலங்கைத் தமிழர்களும் இணைந்து நெதர்லாந்தில் தங்களின் வழிபாட்டிற்காக ஒரு சிறிய இடத்தில் ஆலயத்தை ஆரப்பித்திருந்தார்கள் அதனோடு சேர்த்து இங்குள்ளவர்களின் பிள்ளைகள் தமிழ் மொழி இவர்களின் கலைகலாச்சாரம் சமய வழிபாடு என்பவற்றை அறிந்துகொள்வதற்கு பாடசாலை ஒன்றையும் ஆரம்பித்தார்.

அந்த பாடசாலையை தானே பொறுப்போற்று நடாத்தினார் பிள்ளைகளின் கல்வியார்வமும் கலையார்வமும் சிறப்பாக வளர்ச்சி

*கண்டது பல சிரமங்களின் மத்தியிலும் இவரது பிள்ளைகளையும் பார்த்துக்கொண்டு பாடசாலையை பொறுப்பேற்று நடாத்திக்கொண்டு இந்த நாட்டு மொழியான டச் மொழியையும் இவர் கற்றுவந்தார். ஆரம்ப காலங்களில் இங்கு தமிழ்மொழியிலான வானொலிகள் மிகவும் குறைவு அவர் குறிப்பிடுவது ஐரோப்பாவின் முப்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தை சஞ்சிகைகள் பத்திரிகைகள் எல்லாமே மிகவும் குறைவு இன்று இருப்பதுபோல் தொழில்நுட்பவசதிகள் எதுவும் இல்லாத காலம் ஆனாலும் இவருக்கு இருந்த தமிழ் மீதான பற்றும் இலக்கிய ஆர்வமும் லண்டன் பிரான்ஸ் போன்ற நாடுகளில் இருந்து பகுதிநேரம் ஒலிபரப்பாகிய வானொலிகளில் கவிதைகள் சிறுகதைகள் இசையும் கதையும் என பங்குபற்றிவந்தார் இலண்டனில் இருந்து வெளியாகும் கலசம் ஜேர்மன் நாட்டில் இருந்து வெளியாகும்.*

*கலைவிளக்கு மண் சஞ்சிகைகளிலும் இவரது ஆக்கங்களோடு பங்குபற்றி விருதுகள் பரிசில்கள் பெற்றுவந்தார் இலக்கிய விழாவில் விவாதத்திறன் போட்டியில் தங்கப்பதக்கமும் சொல்லின் செல்வம் என்ற பட்டமும் பெற்றுக்கொண்டார்.*

*கவிதாயினி கவித்தாரகை கவியரசி பாமகள் போன்ற பட்டங்கள் பெற்றுக்கொண்டார். 2003ம் ஆண்டில் புலம்பெயர் வாழ்வில் 500 கவிதைகள் எழுதி முடித்த தருணத்தில் பல சிரமங்கள் தாண்டி என்னதவம் செய்தேன் என்ற இவரது முதலாவது கவிதைத் தொகுப்பை வெளியிட்டார். இது இவரது முதல் வெளியீடு மட்டுமல்ல நெதர்லாந்தின் முதற் தமிழ் கவிதை வெளியீடுமாகும். மிகுந்த பாராட்டுக்களைப் பெற்றார்.*

*2009 இல் இவரது இரண்டாவது கவிதைத் தொகுதியான வழிகளைத் தொலைத்த விழிகளை வெளியீடு செய்தேன் இங்கு கிராமங்கள் தோறும் உள்ள சிறிய தமிழ்ப் பாடசாலைகளின் ஆண்டு விழாக்களிலும் மன்றங்களின் கலைவிழாக்கள் கலாச்சார விழாக்கள் அரங்கேற்ற விழாக்கள் போன்றவற்றில் பிரதம விருந்தினராகவோ சிறப்பு விருந்தினராகவோ கௌரவ விருந்தினராகவோ பங்குபற்றிவருகிறார்.*

*கவிப்பேரரசு வைரமுத்து அவர்களின் மூன்றாம் உலகப்போர் கவிநாயகர் வி கந்தவனம் அவர்களின் பாவாரம் வித்துவான் வேந்தனாரின் நூற்றாண்டு விழா சேரனின் நூல்வெளியிட்டுவிழா போன்ற நிகழ்வுகளில் மிகுந்த உணர்வோடு பங்கேற்றிருந்தார். பல அரங்கேற்ற மலர்கள் நிலைவு மலர்கள் பாராட்டுப் பாக்கள் வாழ்த்துப் பாக்கள் எனப் பலருக்கும் எழுதிக்கொடுத்து அவர்களை வாழ்த்தி வருகின்றார்.*

*இவர் தமிழ்ப் பணியோடு சேர்த்து இந்த நாட்டு மொழியையும் கற்று பரீட்சைகள் எழுதி அதில் தேர்ச்சி கண்டு 2010 ம் ஆண்டில் மீண்டும் இவரது ஆசிரியர் பணிக்குள் நுளைந்து கொண்டார் (நெதர்லாந்து பாடசாலைகள்) படிப்படியாக முன்னேறி உயர்நிலை மாணவர்களுக்கு கணிதபாட ஆசிரியராக கடமையாற்றி வருகிறார்.*

*கணிதபாடத்தில் சிரமப்பட்ட மாணவர்களுக்கு வீட்டிற்கு அழைத்து விசேட பயிற்சி கொடுத்து அவர்களை பல்கலைக்கழகம் செல்ல துணைபுரிந்தார். இவரிடம் படித்த பல தமிழ் மாணவர்கள் நெதர்லாந்து மாணவர்கள் ஆப்கானிஸ்தான் இன மாணவர்கள் வைத்தியர்களாக மிருக வைத்தியர்கள் இன்னும் பல துறைகளில் பல்கலைக்கழகத்தில் கற்றுவருகிறார்கள்.*

அத்தோடு இவர் தமிழ் மீதான பற்றும் வளர்ந்துகொண்டே வர இதுவரை இவர் 3000கவிதைகள் வரை எழுதியுள்ளார் 100 கவியரங்கங்களில் பங்குபற்றியுள்ளார் 40 கவியரங்கங்களிற்கு தலைமைதாங்கியுள்ளார்.

இவர் பாடசாலைக் காலத்தில் இருந்து ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைக் காலம் இன்றுவரை பல நாடகங்கள் பட்டிமன்றங்கள் பட்டிமன்ற நடுவர் என பல நிகழ்வுகளில் நேரடியாகவும் இணையத்தின் ஊடாகவும் பங்குபற்றி பாராட்டுக்கள் விருதுகள் பெற்றுள்ளார் இவர் பிள்ளைகளுக்கும் ஏனைய பிள்ளைகளுக்கும் பரதநாட்டியம் சொல்லிக்கொடுத்திருக்கின்றார்.




லன்டன் தமிழ் வானொலியோடு 25 ஆண்டுகளாக கவிதைகள், கவியரங்கங்கள் எனப் பல்வேறு நிகழ்வுகளுடன் இணைந்து பயணிக்கின்றார். கணனித்தொழில் நுட்பத்தை கற்று அதற்கான பரீட்சை எழுதி சித்திபெற்றிருக்கிறார். ஏனெனில் அது இவரது ஆசிரியர் பணிக்கு அத்தியாவசியமாக இருந்தது வாரத்தில் ஒரு நாள் பெண்கள்ன குழுமத்திற்கு ஆரம்ப கணனி பாடங்களைச் சொல்லிக்கொடுத்தார்.

இதில் பல வெளிநாட்டு இனமக்களோடு நெதர்லாந்துப் பெண்களும் வந்து கற்றுக் பயனடைந்தார்கள் கிட்டத்தட்ட பத்து ஆண்டுகளாக இங்கு மனிதநேய செயற்பாடுகளிற்கான கூட்டுறவுச் சங்கம் இயங்கிவருகிறது இது தாயகத்தில் உள்ள கணவனை இழந்த பெண்களின் துயர்துடைக்கும் செயற்பாட்டைச் செய்து வருகின்றார் இதனோடும் இவரும் இவரது குடும்பத்தவர்கள் அனைவரும் இணைந்து பணியாற்றிவருகின்றார்கள் இங்கு மகளிர் மன்றத்தை ஆரம்பித்து நான்கு ஆண்டுகள் மன்றத் தலைவியாக இருந்து வழிநடாத்துகிறார்.

உலக சாதனை நிகழ்வுகளில் பங்கெடுத்துள்ளார் திருக்குறள் அதிகாரங்களிற்கு மரபுக்கவிதை எழுதி வாசித்து உலக சாதனை நிகழ்வில் பங்கேற்றிருந்தார்.

முகநூல்களினூடாக நடாத்தும் பல கவிதைப் போட்டி நிகழ்வுகளில் கலந்து வெற்றிபெற்று விருதுகள் பெற்றுள்ளார்.

நெதர்லாந்து இணையத்தளத் தொலைக்காட்சியில் பேசுதமிழே சிறுவர்க்கான நிகழ்ச்சியின் நிகழ்ச்சித் தொகுப்பாளராக இருந்து வருகின்றார்.

இத்தொலைக்காட்சியில் பல சிறப்பு கவியரங்கங்களில் பங்குபற்றி வருகின்றார் சூரியத் தமிழ் தொலைக்காட்சியில் 164 மணித்தியாலங்கள் தொடர்நிகழ்வு உலக சாதனை நிகழ்வில் தலைமைப் பொறுப்போடு கவியரங்கம் எனப் பல நிகழ்வில் பங்கெடுத்து உலகசாதனை விருதைப் பெற்றுக்கொண்டார்.

கனடா ஞானந்தமிழ் மன்றத்தில் பத்திற்கும் மேற்பட்ட கவியரங்கத்தில் பங்குபற்றினார் பைந்தமிழ் சாரலில் நூல் ஆய்வுகள் விமர்சன நிகழ்வுகளோடு பங்கேற்றிருந்தார். நெதர்லாந்து ஐங்கரன் கலை இலக்கிய மன்றத்தை ஸ்தாபித்து இங்கு வாழ் இலைமறைக் காயாகவுள்ள கவிஞர்களுக்கு ஊக்கம் கொடுப்பதோடு ஈழத்துக் கவிஞர்கள் சர்வதேச கவிஞர்கள் என பலரையும் இணைத்துக்கொண்டு பயணிக்கிறார். கடந்த ஆண்டு கனடா விழித்தெழு பெண்ணே என்ற சர்வதேச பெண்கள் அமைப்பினால் இவர் சிறந்த சாதனைப் பெண் என்ற விருதினைப் பெற்றார் இதை விட அன்னை தெரேசா விருது பாரதியார் விருது வாகைநல்லாள் விருது என பல விருதுகளைப்ன பெற்றுள்ளார். சூரியத் தமிழ் இணையத்தளத் தொலைக்காட்சி ஐங்கரன் கவிப் பேரொளி என்ற விருதையும் சாதனைப் பெண் என்ற விருதையும் தந்து கௌரவித்துள்ளது.

இது தவிர இவர் தமிழ் ஆர்வத்தால் இவர் பல குழுமங்களிலும் கவிதை எழுதி வருகின்றார் அதன் மூலம் இவருக்கு தாய்மண் பாவலர் விருது, சித்திரைக் கவிஞர் விருது, இளம் சூரியன் விருது என்பனவும் பல வெற்றிச் சான்றிதழ்களும் கிடைக்கப் பெற்றன. சிந்தனைச் சிறகுகள் நாகை சங்கமம் இவருக்கு சிந்தனை மேதகு விருது வழங்கியதும் மிகுந்த மகிழ்வைத் தந்ததுல்லது உலகத் தமிழ்க்கூடல் வையத் தமிழ்ச் சங்கம் தேனி பன்னாட்டுக் கவியரங்கில் பங்குபற்றியுள்ளார் அமெரிக்க முத்தமிழ்ச் சங்கம் சர்வதேச கவியரங்கில் பங்குபற்றியுள்ளார்.

இவர் ஆரம்ப காலத்தில் இருந்தே கிட்டத்தட்ட முப்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்தே புதுக்கவிதைகளோடு மரபுக் கவிதைகளையும் எழுதிவருகிறார் இவருக்கு தமிழ் மீது உள்ளபற்று இவரை தமிழ் கற்க தூண்டு இருக்கிறது. கடந்த ஓர் ஆண்டுகளாக இவர் இணையத்தின் ஊடாக மரபுக்கவிதை வகைகளைக் திருமதி சரஸ்வதி பாஸ்கரன் அவர்களிடம் கற்றுவருகின்றார். அந்த மரபு வகுப்பின் தேர்வில் மரபுப் பாமணி என்ற பட்டயம் இவருக்கு கிடைத்தது. தொடர்ந்தும் விருத்தப் பாமணி என்ற பட்டையத்திற்காக பல்வேறு வகையான விருத்தங்கள் பயின்றுவருகின்றார்.

இந்த ஆண்டு மீண்டும் திருக்குறள் உலக சாதனைக் கவியரங்கத்தில் பங்கெடுத்துல்லார். இம்முறை அதிகாரங்களிற்கு மரபுக்கவிதை புதுக்கவிதை எழுதி வாசித்ததோடு இவர் ஒருங்கிணைப்பாளராகவும் இருந்து உலகசாதனைக் கவியரங்கத்தை தலைமையேற்று நடாத்தி சிறந்த உலக சாதனை விருதை பெற்றுக்கொண்டார்.

ஸ்ரீ வரத ராஜ செல்வ விநாயகர் மீது திருவூஞ்சல் பாடலோடு பல கீர்த்தனைகளை பாடியுள்ளார் அவற்றை நூல் வடிவத்திலும் இசைப் பேழையாகவும் தர பெரு முயற்சி செய்கிறார் இவர் கூறுகையில் இவையெல்லாம் மிகவும் சிறிய அற்பமான பணிகள்தான் ஆனால் நான் எங்கு வாழ்ந்தாலும் மற்றவர்களுக்கு நிழல்தரும், பயன்தரும் நல்ல விருட்சமாக நான் வாழவேண்டும் என்ற கொள்கையோடு வாழ்ந்துவருகின்றேன் என்று கூறி தன்னடக்கத்தை வெளிப்படுத்துகிறார்.

**ஜஸூரா ஜலீல்**

# நான்காம் கைத்தொழில் புரட்சியின் செல்வாக்கு மிகு நுட்பங்கள்

**ப.மு. நவாஸ்தீன்**
**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

*1980 களில் நாம் மிக ஆவலுடன் பார்த்து மகிழ்ந்திருந்த தொலைக்காட்சி நாடகத் தொடர் நைட்ரைடர் (Knight Rider) ஆகும். இதில் தோன்றும் கதாநாயகன் (மைக்கேல்), தானாக இயங்கும் காருடன் (கிட்) நிகழ்த்தும் சாதனைகளை நாம் வாய் பிளந்து பார்த்ததுண்டு. கிட் என்ற அந்த தன்னியக்க கார், கதாநாயகனுக்கு ஒரு பிரத்தியேக உதவியாளர் போன்றும் செயற்படும்.*


*இன்னொரு திரைப்படமொன்றில் கதாநாயகன் நடந்து கொண்டே சொல்லும் விடயங்களை மேசையில் உள்ள தட்டச்சு இயந்திரம் தானாக அவற்றை தட்டச்சு செய்து கொண்டிருக்கும். இவை போன்ற பலவிடயங்களை கடந்த கால திரைப்படங்களில், நாவல்களில், கற்பனை செய்திருப்பார்கள்.*

*இவற்றையெல்லாம் பார்த்தபோது, மாயாஜாலக் கதைகளாகவே நாம் அவற்றை கடந்து வந்திருந்தோம். இவையெல்லாம் நிஜத்தில் நடக்கின்ற காரியங்களா என எண்ணாமலும் இல்லை. எனினும், இன்று நிஜத்தில் தானாக*



*இயங்கும் கார், பிரத்தியேக உதவியாளராக செயற்படக்கூடிய அலஸ்கா போன்ற டிஜிட்டல் உபகரணங்கள், உரையாடலை தன்னியக்கமாக டைப் செய்தல் போன்றன நாம் அன்றாடம் காணும் சாதாரண நிகழ்வுகளாகி வருகின்றன.*

*உலகின் அசுர வளர்ச்சி கண்டுள்ள தொழினுட்பத்தின் காரணமாக இவை சாத்தியமாகி வருகின்றன. குறிப்பாக செயற்கை நுண்ணறிவு, தன்னியக்க தொழினுட்பம் மற்றும் இயந்திர கற்றல் ஆகியவற்றின் வளர்ச்சியின் காரணமாக மனிதர்கள் செய்யக் கூடிய விடயங்கள் பலவற்றை இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் செய்யத் தொடங்கியுள்ளதைக் காண முடிகிறது. இதுவே உலகின் நான்காம் கைத்தொழில் புரட்சி எனப்படுகிறது.*




நான்காவது கைத்தொழில் புரட்சி என்பது பாரம்பரிய தொழில்களின் தொடர்ச்சியான மாற்றம் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI), இயந்திர கற்றல் (ML), தன்னியக்கம் போன்ற மேம்பட்ட தொழில்நுட்பங்களின் ஒருங்கிணைப்பைக் குறிக்கிறது.

கைத்தொழில் வளர்ச்சியின் இந்த புதிய சகாப்தம் முந்தைய மூன்று கைத்தொழில் புரட்சிகளை அடிப்படையாகக் கொண்டது: முதலாவது, 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கைமுறை உழைப்பிலிருந்து இயந்திரமயமாக்கலுக்கு மாறியது இரண்டாவது, 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பாரியளவிலான உற்பத்தி முறைகளைக் கொண்டு வந்தது மற்றும் மூன்றாவது, 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கணினிகள் மற்றும் தன்னியக்கம் எனும் ஆட்டோமேஷனின் வருகையைக் கண்டுள்ளது. எனவே, நான்காம் கைத்தொழில் புரட்சியின் செல்வாக்கு மிகு நுட்பங்களாக செயற்கை நுண்ணறிவு (Artificial intelligence), இயந்திர கற்றல் (Machine Learning) மற்றும் ஆட்டோமேஷன் (Automation) அல்லது தன்னியக்க தொழினுட்பம் ஆகியற்றை குறிப்பிட்டுக் கூறலாம்.

செயற்கை நுண்ணறிவு (Artificial intelligence), இயந்திர கற்றல் (Machine learning) மற்றும் தன்னியக்க தொழினுட்பம் (Automation) ஆகியவை ஒன்றோடொன்று தொடர்புடைய எண்ணக்கருக்கள் ஆகும்.

இவை எமது வாழ்க்கை முறைகளை மற்றும் வேலை செய்யும் முறைகளை விரைவாக மாற்றுகின்றன. இவை பெரும்பாலும் ஒன்றுக்கொன்று இடைத்தொடர்பு கொண்டவையாகும். இவற்றை தனித்தனியாக எடுத்து நோக்கும் போது, ஒவ்வொன்றும் தனித்துவமான தொழில்நுட்பங்கள் மற்றும் பயன்பாடுகளைக் கொண்டுள்ளன.

செயற்கை நுண்ணறிவு என்பது இயந்திரங்கள், குறிப்பாக கணினிமுறைமைகள் மூலம் மனித நுண்ணறிவு செயன்முறைகளை உருவகப்படுத்துவதாகும்.

அதாவது, கணணி முறைமைகள் மூலம், மனிதர்களின் செயற்பாடுகளையொத்த நடவடிக்கைகளில் இயந்திரங்கள், உபகரணங்களை செயற்படுத்தும் முறையினை இது குறித்து நிற்கிறது. இது பொதுவாக மனித நுண்ணறிவு தேவைப்படும் பகுத்தறிவு, கற்றல் மற்றும் பிரச்சினைத் தீர்த்தல் போன்ற பணிகளைச் செய்யக்கூடிய இயந்திரங்களை உருவாக்குவதில் கவனம் செலுத்துகிறது. விதி-அடிப்படையிலான முறைமைகள் ( rule-based systems), இயற்கை மொழி செயலாக்கம் (natural language processing) மற்றும் கணணி நோக்கு (computer vision) ஆகிய நுட்பங்களை கொண்டு இது இயங்குவதாக உள்ளது.

இயந்திர கற்றல் என்பது செயற்கை நுண்ணறிவின் உபகுழு ஆகும், இது வடிவங்களை அடையாளம் காணவும் தரவின் அடிப்படையில் எதிர்வு கூறல்களை உருவாக்கவும் பயிற்சி வழிமுறைகளை உள்ளடக்கியது.



ஒரு மாதிரியுருவில் அதிகளவிலான அளவிலான தரவை இடுவதன் மூலம் இது நிறைவேற்றப்படுகிறது. இத்தகைய மாதிரி உரு தரவுகளுக்கு இடையில் தொடர்புகளை அடையாளம் கண்டு வடிவங்களை உருவாக்கவும், அந்த வடிவங்களின் அடிப்படையில் எதிர்வு கூறல்களைச் செய்யவும் கற்றுக்கொள்கிறது. இத்தகைய மாதிரியுருக்களில் அதிகமதிகம் தரவுகளை இடுவதன் மூலம், மிகவும் துல்லியமான மற்றும் அதி நவீன எதிர்வு கூறல்க்ளைச் செய்ய முடியுமாக இருக்கும்.

தன்னியக்கமாக்கல் என்பது மீண்டும் மீண்டும் நிகழும் அல்லது சாதாரணமான பணிகளை தானியக்கமாக்குவதற்கு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதைக் குறிக்கிறது. இது உற்பத்தி செயன்முறைகள் முதல் வாடிக்கையாளர் சேவை தொடர்புகள் வரை அனைத்தையும் உள்ளடக்கிறது. ரோபோக்கள், சாட்போட்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவின் பிற வடிவங்கள் உட்பட பல்வேறு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி இத்தகைய ஆட்டோமேஷனை நிறைவேற்றலாம்.

இந்த மூன்று தொழில்நுட்பங்களின் கலவையானது பரந்த அளவிலான தொழில்கள் மற்றும் தொழில்களை மாற்றுகிறது. எடுத்துக்காட்டாக, மருத்துவத்துறையில், செயற்கை நுண்ணறிவுடன் இயங்கும் கண்டறியும் கருவிகள் மருத்துவர்களுக்கு மிகவும் துல்லியமான நோயறிதல்களைச் செய்வதற்கும் மிகவும் பயனுள்ள சிகிச்சைத் திட்டங்களை உருவாக்குவதற்கும் உதவுகின்றன. நிதித்துறையில், இயந்திர கற்றல் வழிமுறைகள், பரந்த அளவிலான தரவுகளை பகுப்பாய்வு செய்யவும், முதலீட்டாளர்கள் அதிக தகவலறிந்த முடிவுகளை எடுக்க உதவும் வடிவங்களை அடையாளம் காணவும் பயன்படுத்தப்படுகின்றன.

உற்பத்தியில், தானியங்கு தொழில்நுட்பங்கள் உற்பத்தி செயன்முறைகளை ஒழுங்குபடுத்தவும் மனித உழைப்பின் தேவையை குறைக்கவும் பயன்படுத்தப்படுகின்றன. போக்குவரத்தில், சுயமாக ஓட்டும் கார்கள் மற்றும் டிரக்குகள் உலகெங்கிலும் உள்ள பொருட்களையும் மக்களையும் நகர்த்துவதில் புரட்சியை ஏற்படுத்த தயாராக உள்ளன.

இருப்பினும், எந்தவொரு புதிய தொழில்நுட்பத்தையும் போலவே, AI, ML மற்றும் தன்னியக்க தொழினுட்பம் தொடர்புடைய அபாயங்கள் மற்றும் சவால்களும் உள்ளன. குறிப்பாக இவற்றின் அசுர வளர்ச்சி மனித வேலைவாய்ப்புக்களில் ஏற்படுத்தப் போகும் தாக்கம் ஆகும். இவை, மனிதர்களின் சம்பிரதாயபூர்வமான வேலைகளை குறைக்கச் செய்வதுடன். பல புதிய வேலைவாய்ப்புகளுக்கான தேவைகளையும் உருவாக்குகின்றன. அதேபோன்று, மனித அழிவுகளுக்கு இட்டு செல்லும் வழிகளிலும் இந்த தொழில்நுட்பங்களை மனிதர்கள் பயன்படுத்தும் அபாயமும் இல்லாமலில்லை.

இந்த அபாயங்களை நிவர்த்தி செய்வதற்கும், AI, ML மற்றும் தன்னியக்க தொழினுட்பம் ஆகியவை சமுதாயத்திற்கு

நன்மை பயக்கும் வழிகளில் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்கும், முறையான ஒழுக்கநெறிமுறை வழிகாட்டுதல்களை உருவாக்கி நடைமுறைப்படுத்த வேண்டிய தேவைகள் எழுந்துள்ளன. இதில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் நடவடிக்கைகள், அத்துடன் இந்த தொழில்நுட்பங்களின் பொறுப்பான மேம்பாடு போன்றவற்றுக்கான வழிகாட்டுதல்களும் இருக்க வேண்டும்.

முடிவில், செயற்கை நுண்ணறிவு, இயந்திர கற்றல் மற்றும் தன்னியக்க தொழினுட்பம் ஆகியவை நாம் வாழும் மற்றும் வேலைசெய்யும் முறையை மாற்றியமைக்கின்றன. இவை சமூகத்திற்கு குறிப்பிடத்தக்க நன்மைகளை கொண்டு வரமுடியும்.

எனினும், இத்தொழில்நுட்பங்களை எச்சரிக்கையுடனும் பொறுப்புடனும் அணுகுவது முக்கியம், அவை பாதுகாப்பான, நெறிமுறை மற்றும் அனைவருக்கும் நன்மை பயக்கும் வழிகளில் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.












# பாடசாலை மாணவர்கள் மத்தியில் அதிகரித்த போதைப்பொருள் பாவனையும் கேள்விக்குள்ளாகும் எதிர்காலமும்

உலகலாவிய ரீதியில் 15–64 வயதுடைய சுமார் 284 மில்லியன் மக்கள் போதைப் பொருள் பாவனையில் ஈடுபடுகின்றார்கள் (UNODC World Drug Report, 2022) இன்றைய உலகில் இளைஞர்கள் அதிகமான போதைப் பொருட்களை பயன்படுத்துகின்றார்கள்.

குறிப்பாக மாணவ சமுதாயத்தில் தற்போது போதைப் பொருள் பாவனையின் வீதம் அதிகரித்தவண்ணமே உள்ளது. இலங்கையைப் பொறுத்த வரையில் 2016க்குப் பின்னர் மதுபாவனை அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. 2018ம் ஆண்டு அதிகூடிய போதைப் பொருள் கைப்பற்றப்பட்ட ஆண்டாக பதிவாகியுள்ளது.

வடக்கு பிரதேசங்களில் கடல்மார்க்கமாக பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகளிலிருந்து போதைப் பொருட்கள் கொண்டு வருவதாக National dangerous drugs control board அறிக்கை தெரிவிக்கின்றது. மதுபாவனையில் உலகளாவிய ரீதியில் இலங்கை 4வது இடத்தில் காணப்படுகின்றது (National dangerous drugs control board, 2020). இலங்கையில் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் 50% திருமணமாகாத இளைஞர்கள். இவர்களுள் பலர் பல்கலைக்கழக, உயர்தர மற்றும்



**எம்.எச்.எம்.சிப்கான்**

***இளங்கலை மாணவர் – இஸ்லாமிய ஆய்வுகள் மற்றும் அரபு மொழி பீடம், (SEUSL) ஆசிரியர், மஹாசினுல் உலூம் இஸ்லாமியக் கல்லூரி– பாலமுனை, இலங்கை.***

சாதாரன தர மாணவர்கள் என இலங்கை சுகாதார அமைச்சின் அறிக்கை தெரிவிக்கின்றது. 2017ம் ஆண்டின் ஔடத அதிகார சபையின் புள்ளிவிபர அறிக்கையின்படி 2016ஐ விட 2017ல் போதைப்பொருள் பாவனை ஆனது இலங்கையில் அதிகரித்து காணப்படுகின்றது என்றும் வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு

போதைப் பொருள் கடத்தி வந்த 186 வெளிநாட்டுப் பிரஜைகள் கைதாகி உள்ளதாகவும், வளர்ந்தவர்களை விட இளைஞர்களிடையே போதைப் பழக்கமானது எண்ணிக்கை அதிகரித்து வருவதாக அறியக் கிடைத்துள்ளது.

மனித வளர்ச்சிப் பருவத்தில் கட்டிளமைப்பருவம் ஆபத்தான மனித வாழ்வின் படிநிலையாக கூறப்படுகின்றது. இக்காலகட்டத்தில் ஒருவன் தன் முழு மனித விருத்தியில் 75% னை அடைகின்றான். இங்கு அவனது விருத்தியில் குடும்பம், சமூகம், பாடசாலை. நண்பர்கள், ஆசிரியர், மற்றும் ஊடகம் என்பன பாரிய தாக்கத்தினை உண்டு பண்ணுகின்றது.

தீய பழக்கமுள்ளவர்களின் சேர்க்கை, முன்மாதிரிகளின் செல்வாக்கு, தவறான நண்பர்களின் சேர்க்கை, உடல், உள மாற்றங்கள் என்பன போதைப் பாவனையை கற்றுக் கொள்ள தூண்டுகின்றது. நண்பர்களோடு சேர்வதனால் ஏற்பட்ட தீயபழக்கங்களினாலும் மற்றும் பொழுதுபோக்காகவும் பழகிக் கொண்ட பழக்கத்தை இன்று வரை விட்டு மீளமுடியவில்லை என வருத்தப்பட்டுக் கொள்பவர்களும் இருக்கிறார்கள்.

பலமுறை இத் தீய பழக்கங்களை விட்டொழிக்க வேண்டும் என முயற்சி எடுத்து தோற்றுப் போனவர்களும் இருக்கிறார்கள். ஒன்றைத் தவிர்க்க அல்லது மறக்க மற்றொன்றை பயன்படுத்தி அதையும் சேர்த்து அடிமையாகிக் கொண்டவர்களும் இருக்கின்றனர்.

மாணவர்கள் சாதாணரமாக கிடைத்துவிடும் போதைதரவல்ல சாராயம் மற்றும் அதைச் சார்ந்த மது வகைகளான கஞ்சா, போதை இனிப்புக்கள், மாவா போன்றவைகளை தற்போது பள்ளிப் பருவத்திலேயே பலரும் உள்ளெடுக்கப் பழகிக் கொண்டிருப்பதை கண்கூடாகக் காணமுடிகின்றது. இதற்குக் காரணம் பல இருந்தாலும் ஆங்காங்கே அமைத்திருக்கும் மதுக்கடைகளும், அது தொடர்பான விளம்பரங்களும், இதற்குக் கிடைத்திருக்கும் அங்கீகாரமும் முக்கிய காரணமாகும். மேலும் திரைப்படங்கள் இத்தகைய போதைப்பழக்கத்தை இளைஞர்கள் கொண்டிருப்பது தவறில்லை என்று சித்தரிப்பதும், மகிழ்ச்சி மற்றும் துக்க வேளைகளில் பேதைப்பொருட்கள் தேவை என்ற மனோநிலைகளை உருவாக்கு வதிலும் திரைப்படங்களின் பங்கு காணப்படுகின்றது. அநேகமான குடும்பங்களில் மதுபானம், புகைத்தல் என்பது சாதாரணமானதோர் விடமாகவே மாறியுள்ளது. இவ்வாறான குடும்ப சூழலில் வாழும் பிள்ளைகள் போதைப் பழக்கத்தினை இலகுவாக கற்றுக் கொள்கின்றனர்.

மாணவப் பருவத்தில் பழகிக் கொள்ளும் இத்தகைய போதைப் பழக்கங்கள் சிறிது சிறிதாக இவர்களை அடிமையாக்கி விடுகிறது. போதைப் பழக்கத்தினால் முதலில் பாதிப்படைவது நரம்பு மண்டலம். மூளைக்குச் செல்லும் நரம்புகளைப் பாதித்து நினைவாற்றலை குறைக்கச் செய்கின்றது இதனால் கற்கும் திறன் பாதிக்கப்படுகவதுடன் சீரான இதயத்துடிப்பு பாதிக்கப்பட்டு இரத்த அழுத்தம் அதிகரிக்கின்றது.

உடலில் ஏற்படும் இத்தகைய மாற்றங்களினால் இதை உட்கொண்டவர்கள் மனதளவில் தன்னம்பிக்கை இழக்கிறார்கள். உடல் சோர்வடைதல், குற்ற உணர்ச்சி, தனிமையை நாடுவது போன்ற மனநிலைக்கு உள்ளாகின்றார்கள். போதைப் பொருட்களினால் உடல் ஆரோக்கியத்திற்கு ஏற்படும் பாதிப்புகள்,

*சமுதாயம் மற்றும் குடும்பத்தில் ஏற்படும் பாதிப்புகள் என பலவகையான தீமைகளை அடுக்கிக்கொண்டே செல்லலாம்.*

*இளம் வயதினர் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாவதற்கு அவர்களின் நண்பர்களே முக்கிய காரணம் எனத் தெரியவந்துள்ளது. இவ்வாறானவர்களில் 88.2 வீதமானவர்கள் நண்பர்கள் மூலமும் 10 வீதமானவர்கள் உறவினர்கள் மூலமும் 1.8 வீதமானவர்கள் உல்லாசப் பயணிகள் மூலமும் போதைக்கு அடிமையாகின்றனர். நாட்டின் எதிர்காலம் வளரும் சமுதாயத்தின் கரங்களில் உண்டு என்பார்கள். ஆனால் இவ்வாறான நிலைமை தொடருமானால் எதிர்காலம் கேள்விக்குறியாகும் என்பதில் சந்தேகமில்லை. இதனால் மாணவர்கள் போதைக்கு அடிமையாவது தடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்.*

*உலக நாடுகளெல்லாம் போதைப் பொருட்கள் கடத்தலுக்கு எதிராக கடுமையான சட்டம் கொண்டு கட்டுப்படுத்தி வருகின்றன. இருப்பினும் ஹேரோயின், கஞ்சா போன்ற பொருட்களை விற்பதும் பிற நாடுகளுக்கு கடத்துவதும் இன்றுவரையிலும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. பாடசாலை வாசல்களிலேயே கஞ்சா சொக்லெட்கள் விற்கப்படுவதும், விற்பவர்கள் கைது செய்யப்படுவதும் பத்திரிகைகளில் படிக்கின்றோம். சுற்றுப்புறங்களில் அருகாமையில் சிதறிக்கிடக்கும் மதுப் போத்தல்களும், ஊசிகளும் போதைக்கு அடிமையாகிக் கொண்டிருப்பதற்குச் சான்றாகும்.*

*பாடசாலைகளை அண்மித்த இடங்களில் போதைப்பொருள் விற்பனை செய்யும் நிலை இன்று உருவாகியுள்ளது. 10ம் வகுப்பு படிக்கும் போது புகைத்தல் பழக்கத்திற்கு ஆளாகி 18 வயதாகும் போது ஹெரோயின் போதைப்பொருள் பாவிக்கத் தொடங்கி காலப்போக்கில் அடிமையாகக் கூடிய இளைஞர் சமுதாயம் இன்றைய இலங்கையின் பலபிரதேசத்திங்களில் உருவாகியுள்ளது. சட்டத்தின் ஓட்டைகள், ஊழல்கள் போதைப் பொருள் பாவனையை மறைமுகமாக ஊக்குவித்தது. அரசு மற்றும் உற்பத்தி நிறுவனங்கள் புகைப் பொருட்களிலும் போதை மருந்துப் பொருட்களிலும் “இது உடல் நலத்திற்கு கேடானது“ என பொறிக்கப்பட்டுள்ளது.*

*ஆனாலும் அதனை முற்றாக தடை விதிக்கவோ அகற்றவோ அனுமதிக்கவில்லை. ஏனெனில் அரசியல் தந்திரம். ஆட்கொல்லி நோய்கள் வந்தாலும் அரசு தன் பொருளாதார நோக்கை இலக்காக கொண்டே செயற்பட்டது. இவ்வாறு சட்டரீதியாக அனுமதிக்கப்பட்டும் அனுமதிக்கப்படாமல் இரகசியமாகவும் போதைப் பொருள் விற்பனைகள் பல்வேறு தரங்களிலும் விலைகளிலும் வடிவமைப்புகளில் வெளியாகியது. அதன் அதிகரிப்பிற்கு காரணமாக அமைந்தது.*

*போதைப் பொருட்களின் அதிகரிப்பிற்கும் அதன் பாவனைக்கும் பல்வேறான காரணங்களை நாம் கூறினாலும் இன்று அனேக குடும்பங்களில் போதைப் பாவனை உதாரணமாக மதுபானமாகவோ, புகைத்தலாகவோ சாதாரணமாக காணப்படுகின்றது. தனது சொந்த வீட்டில் இல்லாவிட்டாலும், அயலிலோ, வீதியிலோ போதைப் பொருள் பாவனையாளர்களின் அசாதாரண செயற்பாடுகள் காணக்கூடியதாகவே உள்ளது. இந் நிலை ஒரு மனிதனின் பிள்ளைப் பருவங்கள் அவனது சிந்தனைத் திறன் விருத்தி மட்டங்களிலே அதனைப் பற்றி அறியவும் கண்டுகொள்ளவும் தூண்டப்படுகின்றனர். பின்னர் வளர்ச்சிக் கட்டங்களில் சமூகத்தையும் சூழலையும் பார்த்து சரியான*

நடத்தைகளை கற்பது போன்று போதைப் பாவனை தொடர்பான கற்றலையும் அவன் கற்றுக் கொள்கின்றான்.

பெரியவர்களிடையே காணப்படும் போதைப் பழக்கத்தைக் கட்டுப்படுத்துவதே கஷ்டமாக இருக்கும் இக்காலகட்டத்தில் பாடசாலை மாணவர்களிடையே பரவி வரும் போதைப் பழக்கத்தை நாம் எவ்விதம் கட்டுப்படுத்துவது என்பது கேள்விக்குறியே. பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் ஆதரவான அன்பு மற்றும் கண்டிப்பிற்கும்தான் இந்நிலையை மாற்றும் சக்தி உள்ளது. தங்களுடைய பிள்ளைகளின் நடவடிக்கைகளை பெற்றவர்கள் சற்று கூர்ந்து கவனித்தாலே பிள்ளைகளின் நடத்தையில் ஏற்படும் மாற்றம் துல்லியமாகத் தெரிந்து விடும். ஆசிரியர்களும் தங்கள் மாணவர்களின் நடவடிக்கையைக் கண்காணிக்க தினமும் சிறிது செலவழித்தாலே மாணவர்களின் நடத்தையில் ஏற்படும் மாற்றத்தை கண்டுபிடிக்கலாம். இவை எல்லாம் பிரச்சனை வரும்முன் காக்கும் நடவடிக்கைகளாகவும், பிரச்சனை வந்த உடனேயே காக்கும் நடவடிக்கைகளாகவும் அமையும்.

மேலும் பாடசாலையில் ஒவ்வொரு வகுப்பிலும் ஆசிரியர் மாணவர்கள் நலனில் எடுத்துக்கொள்ளும் அக்கறை வெகுவாக குறைந்துகொண்டே வருவதும், பள்ளிகளுக்கு அருகிலேயே மதுக் கடைகள் போன்ற ஆரம்ப நிலை போதை வஸ்துக்கள் விற்கும் கடைகள் பெருகிவருவதும், இத்தகைய கடைகளை அகற்ற சம்மந்தப்பட்ட அரசும், பள்ளி நிர்வாகமும் போதிய அக்கறை காட்டாததும் குறிப்பிடவேண்டிய காரணங்களேயாகும். மாணவர்கள் படிக்கும்போதே பெற்றோரிடமிருந்து பணம் வாங்கி தாராளமாக செலவழிக்கிறார்கள் இவற்றைவிட வெளிநாட்டிலிருந்து வரும் உறவினர்கள் கைச்செலவிற்கென அவர்களுக்கு பணம் கொடுக்கின்றனர். இதனால் தேவைக்கு அதிகமான பணம் பிள்ளைகளிடம் இருப்பதும் போதைப்பழக்கத்திற்கு அவர்கள் அடிமையாகக் காரணமாக இருக்கும் ஓர் விடயம் என்றால் நாம் குற்றம் கூற வேண்டியது பெற்றவர்களைத் தான்.

இன்றைய நாகரீக சூழ்நிலையில் பெற்றோர்கள் இருவருமே வேலை பார்க்கும் நிலையில் பிள்ளைகளின் மீதான அவர்களது கவனம் வெகுவாகக் குறைகிறது. தன் பிள்ளையைத் தன்னால் சரியாக கவனிக்க முடிவதில்லையே என்ற குற்ற உணர்சியால் தூண்டப்படும் இவர்கள் அளவான அன்பையும் பாசத்தையும் பிள்ளைகள் மீது காட்டுவதற்கு பதிலாக பிள்ளைகளின் தேவையான அளவிற்கு அதிகமாக பணத்தினை கொடுத்து தங்கள் குற்ற உணர்சியை மறைக்க வடிகால் தேடுகிறார்கள். அதிக பணப்பழக்கத்தினால் முன்பெல்லாம் வயதுவந்தவர்களே போதைப் பழக்கத்திற்கு அடிமையான காலம் போய் இன்றைய காலத்தில் மாணாவர்களே போதைக்கு அடிமையாகி நிற்கிறார்கள்.

பாடசாலை மாணவர்களுடைய இத்தகைய போதைப்பொருட்கள் பாவனையை தடுக்கும் விதமாக மாணவர்களிடம் போதைப் பொருட்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகளைப் பற்றியும் விரிவாக பேச பெற்றோர்களும் ஆசிரியர்களும் முன்வரவேண்டும். பெற்றோர்கள் மற்றும் நண்பர்களின் ஆறுதலான அரவணைப்பான அணுகுமுறையால் மட்டுமே இந்த விதமான பழக்கங்கள் மாணவர்களிடம் தோன்றாமல் இருக்கச் செய்ய முடியும். இதை எல்லாம் விட்டுவிட்டு என் பிள்ளையின் போதைபழக்கததிற்க்கு அரசாங்கம் மற்றும் காவல்துறைதான்

காரணம் அவர்கள் போதைபொருள் விற்பவர்களை சரியாக தண்டிக்காததால் தான் பிள்ளை போதைப்பழக்கத்திற்கு அடிமையாகிவிட்டது. என்றெல்லாம் அடுத்தவரை குற்றம் கூறுவது சாத்தியமற்றதாகும். இதற்கான பொறுப்பு எம் அனைவரையுமே சாரும் என்பதால் அனைவருடைய ஒத்துழைப்புடனும் மாணவ சமுதாயத்தைக் காக்க வேண்டியது அவசியமானதாகும்.

இலங்கையில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது என பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். மேல் மாகாணம் மற்றும் தென் மாகாணம், அநுராதபுரம் மற்றும் குருநாகல் மாவட்டங்களில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை மிக மிக அதிகளவில் அதிகரித்துள்ளதுள்ளதாக ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

மேலும் போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்த, விசேட அதிரடிப் படையினரை கடமையில் ஈடுபடுத்த தீர்மானிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். அண்மைக்காலங்களில் வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ் மாவட்டத்தில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது. மாணவர்களுக்கான போதைப்பொருள் விநியோகத்தை ஒரு சில குழுக்கள் திட்டமிட்ட முறையில் முன்னெடுத்து வருகின்றபோதும், பொலிஸார் எவ்வித கடுமையான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

இன்றைய மாணவர்களின் அதிகரித்த போதைப்பொருள் பாவனையின் காரணமாக அதிகமான தொற்று நோய்களும் இளவயது மரணங்களும் அதிகரித்துச் செல்வது கவலையான விடயமாக உள்ளது. எமது மாணவர்களை இவ்வாறான போதைப்பொருள் பாவனையிலிருந்து பாதுகாப்பது ஒவ்வொருவரின் பொறுப்பாக காணப்படுகின்றது. ஒரு முன்னேற்றமான சமூகத்தைக் கட்டமைக்க இளைஞர்களை வளப்படுத்துவதே முதன்மை செயற்பாடாக அமையும். அந்தவகையில் போதைக்கு அடிமையானவர்களுக்கு முறையான சிகிச்சைகளை வழங்கி அவர்களை அதிலிருந்து மீட்கவேண்டும். மேலும் போதைப்பொருட்களை பாவிப்பது தொடர்பான கடுமையான சட்டங்களை நடைமுறைப்படுத்தி பாடசாலை மாணவர்களை போதைப்பொருட்களின் பாவனையிலிருந்து பாதுகாக்கவேண்டிய சமூகக் கடமையாக மாறியுள்ளது. போதைப் பொருட்கள் வெளிநாடுகளிலிருந்து எமது நாட்டிற்குள் வருவதை கடுமையான கண்காணிப்பின் மூலம் இல்லாதொழிக்கவேண்டும்.

**முடிவுரை**

இலங்கையில் பாடசாலை மாணவர்களின் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருகின்றது. இதனுடன் தொடர்பான குற்றச்செயல்கள் அதிகம் இடம் பெறுகின்றன. போதைப் பொருள்பாவனையின் காரணமாக பல்வேறு விதமான பிரச்சினைகளை பாடசாலை மாணவர்கள் எதிர்நோக்கி வருகின்றார்கள். இவற்றில் அதிகமாக சிறுவயதில் கல்வியானது முடக்கப்பட்டு இளைஞர்களின் கல்வி அடைவுமட்டமானது குறைவடைந்து செல்லும் நிலை காணப்படுகின்றது.

அதுபோல போதைப் பொருட்களின் பாவனை தனிமனிதனை மட்டும் பாதிக்காது. இதனால் அவரைச் சுற்றியுள்ள சமுதாயமும் பாதிப்படைகின்றது. மாணவர்கள் பாடசாலையில் கல்விகற்கும்

பருவத்தில் போதைப்பொருட்களை பயன்படுத்துவதனால் தமது கல்வி பாதிக்கப்படுவதுடன், தன்னோடு பழகும் சக நண்பர்களின் கல்வியும் பாதித்துவிடும். போதைப்பழக்கமானது சிறிது சிறிதாக அதிகரித்து அந்த போதைப்பொருளைப் பெற்றுக்கொள்ள திருடுதல், பொய் பேசுதல் மற்றும் வெட்கக்கேடான விஷயமாக இருந்தாலும் அதைச் செய்யத் துணிந்துவிடும் நிலை ஏற்பட்டுவிடுகின்றது. இன்றைய காலத்தில் போதையில் அகப்பட்டவர்கள் பயப்படாமல் பாலியல் குற்றங்களிலும் ஈடுபட்டு அதன் மூலம் பல நோய்களையும் ஏற்படுத்திக் கொள்கிறார்கள்.

பாடசாலை மாணவர்களுடைய இத்தகைய போதைப்பொருட்கள் பாவனையை தடுக்கும் விதமாக மாணவர்களிடம் போதைப் பொருட்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகளைப் பற்றியும் விரிவாகப் பேச பெற்றோர்களும், ஆசிரியர்களும் முன்வரவேண்டும். பெற்றோர்கள் மற்றும் நண்பர்களின் அரவணைப்பான அணுகுமுறையால் இந்த விதமான பழக்கங்கள் மாணவர்களிடம் தோன்றாமல் இருக்கச் செய்ய முடியும்.

அதுபோல போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் மருத்துவர்களினதும், உளவளத்துணையாளர்களினதும் ஆலோசனைப் படி செயலாற்றவும் புனர்வாழ்வு அளிப்பதற்கான வழிவகைகளை ஏற்படுத்தவும் வேண்டும். எனவே சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்காக தற்கால பாடசாலை மாணவர்களை போதைப்பொருள் பாவனை போன்ற தீய செயற்பாடுகளிலிருந்து திசைதிருப்பி கல்வி விடயங்களில் முன்னேற்றுவதற்கான செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டியது துறைசார்ந்த ஒவ்வொருவரின் பொறுப்பாகும்.








# மாத்தளையில் உள்ள ஒரு அழகிய கிராமத்தைப் பற்றிய என் அனுபவப் பகிர்வு

*எட்டவத்தை – செலஹம, Mind Word End, North மாத்தளை மற்றும் அதனை அண்டிய பிரதேசங்கள்*




**எம்.ஜே.ஜவ்ஸன் அஹமட்**
**துணிந்தெழு சஞ்சிகை நிருவாக உறுப்பினர்**

மலைகளும் மரங்களும் சூழ்ந்த எழில் மிகுந்த மத்திய மாகாணத்தின் மாதளை நகரில் இருந்து குருநாகல், கலேவல பிரதான வீதியை ஊடறுத்து சுமார் 16km தூரத்தில் அமைந்துள்ளது அக் கிராமம்.

பொலன்னறுவை பிரதேசத்தை ஊடறுத்து வருபவர்கள் பொலன்னறுவை கண்டி ஊடாக ஊடறுக்கும் வெளியில் சுமார் 105km தூரத்தில் Matala North சந்தியை ஊடறுத்து இப்பிரதேசத்தை சென்றடைய முடியும்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் பின்னிப் பிணைந்த உறவுடன் வாழும் இந்த ஊரின் பிரதான நகரப்புறப் பகுதியான எட்டவத்தை,



சிங்கள மக்களின் கட்டுப்பாட்டில் இருப்பினும் கூட மூவின மக்களும் கூட்டான தொழில் முறைமை செய்வதை அவதானிக்க முடிகிறது.

நிககொல்ல எனும் இக்கிராமம் அக்காலத்தில் வெள்ளையர்களால்

இறப்பர் பயிச்செய்கை செய்கை செய்யும் பிரதேசமாகக் காணப்பட்டதற்கான சான்றுகளை இன்றும் காணக்கூடியதாக உள்ளது.

வெள்ளைக்கார துரை வாழ்ந்ததாக கூறப்படும் இப்பிரதேசம் எட்டுப் பகுதிகளின் கட்டுப்பாட்டினை உடைய தலைமை அதிகாரிகள் வாழ்ந்த கருங்கல் கோட்டைகள் இன்னும் இங்கு இருப்பதை அவதானிக்கலாம். இவை சுமார் முந்நூறு வருடங்கள் பழைமை வாய்ந்தவை என ஊர் மக்கள் பலர் சொல்வதை கேட்கக் கூடியதாக இருந்தது.



அது மட்டுமல்லாது மூவின மக்களும் தங்களின் வணக்க வழிபாடுகளை செய்வதற்கு ஏதுவான வணக்கஸ்தலங்கள் இருப்பதையும் அவதானிக்கலாம். இங்கு மூவின மக்களும் மிக அன்னியோன்யமாகவும் ஆரோக்கியமான



உறவுகளை பேணியும் வருவதை அவதானிக்கலாம்.


சுமார் 250 வருட வரலாற்றை உடைய இஸ்லாமியர்களின் மசூதி ஒன்று இருப்பதையும் அது அக்கால கட்டட கலைஞர்களின் கட்டட நுட்ப முறைகளைப் பயன்படுத்தி, சாந்துகள் பூசப்பட்ட களிமண் சேர்க்கப்பட்டதாக இருந்தது. அத்துடன் அக்கால மக்களின் உணவு பழக்கவழங்களுக்காக பயன்படுத்தப்பட்ட சேதமடைந்த மண்பாண்டப் பொருட்களையும் காணக் கிடைத்தது. அது மட்டுமல்லாது மசூதியை அண்மித்த பகுதியில் ஸியாரம் இருப்பதை அவதானிக்க முடிந்தது. எனினும் அதன் வரலாற்றை மக்கள் அறிந்திருக்கவில்லை.

அந்த மசூதி ஊரின் பழைமை வாய்ந்த மசூதி என்பதற்கு சான்றாக அதன் கட்டடக் கலை நுட்பங்கள் காணப்படுகின்றன. அந்த மசூதியின் பழைமைத்தன்மை மாறாமல் இருப்பதற்காக அதனைப் புணரமைக்காமல் அதன் அருகிலேயே வேறு ஒரு மசூதி கட்டப்பட்டிருப்பது சிறப்பம்சமாகும்.

அழகிய இயற்கை காட்சிகளைக் கொண்ட இப்பகுதி சுற்றிவர நான்கு பகுதிகளிலும் மிகப்பெரும் குன்று மலைகளை உடையதாகக் காணப்படுவது இவ்வூரின் பாதுகாப்பிலும் அதன் காலநிலை மாற்றங்களிலும் பெரும் பங்கு வகிப்பதை உணரலாம்.

அக்காலத்தில இறப்பர் தோட்டங்களாக இருந்த பகுதிகள் முன்னோர்களால் அதில், இலங்கையின் பொருளாதாரத்தில் செல்வாக்கு செலுத்தும் வாசனைத் திரவியங்களான ஏலம், கருவா, மிளகு, கராம்பு, சாதிக்காய், வெல்ல மற்றும் பட்டை ஆகியவை பயிரிப்பட்டு வந்துள்ளன.

ஆனால் அண்மைக்காலங்களில் இலங்கையில் ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார வீக்கத்தினால் அந்தப் பயிரச் செய்கைகள் பாரிய அளவில் பின்னடைவு அடைந்திருப்பதையும், கவனிப்பார் அற்றுக் கிடப்பதையும் அவதானிக்க முடிகின்றனது.



எனினும் இப் பயிர்ச் செய்கைகளுக்கு இடையில் தென்னை மரங்களும் பாக்கு மரங்களும் நடப்பட்டு அவை இன்றைய சூழலில் ஓரளவு மக்களின் வாழ்வாதரத்திற்குப் போதுமானதாக இருப்பதை அவதானிக்க முடிந்தது.

இங்கு வசிக்கின்ற மக்கள் தங்களின் ஜீவனோபாயத்தை முன்னெடுத்துச் செல்வதற்காகவும் பிள்ளைகளின் கல்விசார் செயற்பாடுகளில் மாற்றத்தை காண்பதற்காகவும் அண்மையில் காணப்படுகின்ற பிரதேசங்களாகிய, மாத்தளை, கண்டி மற்றும் குருநாகல் போன்ற பிரதேசங்களுக்குக் குடிபெயர்ந்து செல்வதையும் அவ்வாறு செல்ல முடியாதவர்கள் தொழில்களுக்காக அப்பிரதேசங்களுக்கு சென்று வருவதையும் அவதானிக்க முடிந்தது.

இக்கிராமத்தில் அதிகளவானவர்கள் கோழி பண்ணைகளையும் கோழித்தீன் தயாரிப்பு சாலைகளையும் நிறுவி அதில் பலருக்கு தொழில் வாய்ப்பு வசதிகளை கொடுத்திருப்பது இங்குள்ள தொழில் முறைமைகளின் வளர்ச்சியை சுட்டிக் காட்டுவதாக அமைகிறது.

ஊரின் நடு எல்லை பகுதியை ஊடறுத்துச் செல்லும் கிளை நதி அவ்வூர் மக்களுக்கு தேவையான நீர் வசதியைப் பெற்றுக் கொள்வதில் பெரும்பங்கு வகிப்பதையும் புறச் சூழலில் பயிற்செய்கைக்கும், வேளாண்மைக்கும் நீர் பற்றாக்குறை ஏற்படாமல் இருப்பதற்கும் இந்த நதி உதவியாக அமைந்துள்ளது.

கிராமப்புற சூழலாக காணப்படும் இப்பிரதேசம், அழகிய புறச்சூழலையும் பச்சையங்கள் நிறைந்த மர செடி கொடி தாவரங்களையும் கொண்டு காணப்படுவதனால் அதிகம் மழை வீழ்ச்சி உள்ள பிரதேசமாக காணப்படுகிறது. அதுமட்டுமல்லாது இங்கு வாழுகின்ற மக்கள் அழகிய குணமும் மிருதுவான உள்ளங்கள் உடையவர்களாகவும் இருப்பது அவர்களுடனான பின்னிப் பிணைந்த

உறவை மிக இலகுவில் வலுப்படுத்தத் துணை போகிறது.

மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் பெரிதும் பங்களிப்பு செய்யும் அரச பாடசாலை ஒன்றும் இங்கு காணப்படுகிறது சிறப்பம்சமாகும். அதில் அதிகமான பகுதிநேர வகுப்புகளும் மாணவர்களின் பிரத்யோக அறிவை மேம்படுத்த ஏதுவான திறன் செயற்பாடுகளும் நடைபெறுவதை அவதானிக்க முடிந்தது.

மேலும் இப்பகுதிகளில் அதிகம் இயற்கை வளங்கள் காணப்படுவதால் அதிகளவிலான மக்கள் இப்பகுதிகளை



பார்வையிடுவதற்காக வருவதாக ஊர் மக்கள் சொல்கிறார்கள்.

அவர்கள் கூறுவதற்கு சான்றாக, இவ் ஊரில் இருந்து சுமார் 13 கிலோமீட்டர் தூரத்தில் hulangala (selagama) என்னும் பிரதேசம் அமைந்திருப்பதையும் அங்கு அதிகமான வெளிநாட்டவர்கள் வந்து செல்வதையும் அது மட்டுமல்லாது அதிகமானவர்கள் அந்த மலையின் மேற்பகுதியில் இரவுப் பொழுதுகளைக் கழிப்பதையும் அவதானிக்க முடிந்தது. அழகிய இயற்கை வளம் மற்றும் சிற்றுண்டி சாலைகளை கொண்ட இப்பகுதி Mini World End என அழைக்கப்படுகிறது.

மாத்தளை நகர்ப்புறத்திலிருந்து இப்பிரதேசத்திற்கு இலகுவாக செல்வதாயின் கண்டி, யாழ்பாண வீதியில் சுமார் 25km தூரத்தில் சென்றடைய முடியும்.

பனிமூட்டங்கள் நிறைந்ததாகவும் அதிக மரங்களையும் இயற்கையின் எழில் கொஞ்சும் பல அழகிய காட்சிகளையும் கொண்டு காணப்படும் இப்பிரதேசம் இலங்கையின் சுற்றுலாத் தளங்களில் ஒன்றாக இருப்பதை இணையத்தளங்கள் மற்றும் சமூக வலைத்தளங்கள் ஊடாகக் காணலாம்.

இவ்வூர் பிரதேசத்தில் அதிக நாட்களை கழித்து அங்குள்ள இயற்கை வளங்களையும் அங்குள்ள மக்களின் பண்பாடுகளையும் நன்கு உணர்ந்து அவர்களோடு ஒரு பின்னிப்பிணைந்த உறவை ஏற்படுத்திக் கொண்டதன் விளைவாகவே இக்கட்டுரையை நான் வரைந்தேன்.

மேலும் நான் பார்வையிட சென்ற இப்பிரதேசம் எனக்கு புதுவிதமானதொரு அனுபவத்தை கொடுத்தது என்று தான் சொல்ல வேண்டும். இரம்யமான அழகிய சூழல், அமைதியான இராத்தரிப்பு, கண்களைக் கொள்ளை கொள்ளும் காலை சூரிய உதயம், பறவைகளின் அழகிய கீச்சிடும் சத்தங்கள் இவைகள் ஒரு அமைதியான மனோநிலையை எனக்கு கொடுத்தது. அந்த அழகிய அனுபவங்களை உங்களோடு பகிர்ந்து கொள்ளக் கிடைத்தமையை இட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

# சிங்கப் பெண்ணாய் வீறுநடை போடும் விவசாய போதனாசிரியை முர்ஷிதா ஷிரீன் அவர்களுடனான நேர்காணல்

*நேர்காணல் : நிஹாசா நிசார்*

***(1)– உங்களை பற்றிய ஒரு சிறு அறிமுகம்.***

*நான் விவசாய போதனாசிரியையாக கடந்த 10 ஆண்டுகளாக கடமையாற்றி வருகின்றேன். இவ்விவசாய துறை என்பது பல்வேறு விதமான சமூக சேவை பணியாளர்களுடன் தொடர்புடையதுமான துறையாகும். அதாவது, எனது சேவை எனது திணைக்களத்தின் வேலைத் திட்டங்களுக்கு அப்பால், வியாபித்து காணப்படுகின்றது.*



*எனது சுயமுயற்சியின் பயனாக சமூக வலைத்தளங்களான* Whatsapp, Google, YouTube, Instagram, Facebook *என்பவற்றில் "முர்ஷிதா விவசாயம்" எனும் திறவுச்சொல்லின்* (Keyword) *மூலம் விவசாய உலகில் ஊடுருவி பல்வேறான தகவல்களை பெறத்தக்கதாக, இத்திறவுச் சொல் உலகெங்கும் வியாபித்துள்ளது.*

***(2)– நீங்கள் ஒரு பெண்ணாக இருக்கின்ற பட்சத்தில், விவசாயத்தின் மீதான ஆர்வம் மேலோங்கக் காரணம் என்னவாக இருந்தது?***

*எனது குடும்ப சூழல் தான் இதற்கு முக்கிய காரணம். அதாவது எனது தாயின் தந்தை ஒரு சிறந்த விவசாயி. நான் சிறியவளாக இருக்கும்போதே*

*எமது ஊரின் முன்னால் பாராளுமன்ற உறுப்பினர் டீ.யு அப்துல் மஜீத் அவர்களினால் 100 ஏக்கர் வயல் நிலத்தினைக் கொண்டவர்களை பாராட்டும் நிகழ்வில் எனது தாயின் தந்தையை "விவயாசு மன்னர்" என பாராட்டப்பட்டதும், எனது தந்தை எனது சிறு பராயத்தில் மரணித்ததால், எமது*

அன்றாட தேவைகளை எங்களது வயலின் மூலம் கிடைத்த வருமானத்தினால் பூர்த்தி செய்ததும் என பல காரணங்கள் இத்துறையில் ஈடுபடுவதற்கான முக்கிய காரணமாக இருந்தது எனலாம்.

**(3) – உங்கள் ஆர்வத்தின் முதல் கட்டமாக நீங்கள் எடுத்து வைத்த முதல் கட்ட நடவடிக்கை அல்லது முதல் முயற்சி எத்தகையது?**

எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. எனது 03 ம் வயதில் விளையாடும் போது கன்றுகளை நட்டு அதனை பராமரிப்பதனை ஒரு விளையாட்டாக எனது தாய் சொல்லித் தந்துள்ளார்.எனது தாயின் தந்தைக்கு உழவு இயந்திரம் ஒன்றிருந்தது. அறுவடை காலங்களில் அதில் ஒட்டி வரும் நெற்களை ஒன்று சேர்த்து வயல் செய்து விளையாடி உள்ளேன்.

அதே போன்று கொண்டை கடலை, பயறு என்பனவற்றை எனது வீட்டில் நடுகை செய்து அறுவடையும் செய்துள்ளோம். மேலும் சிறுவயதில் எமது வயலில் சமைத்து சாப்பிட செல்லும் போதெல்லாம் நானும் வயல் செய்து அறுவடை செய்ய வேண்டும் என்றெல்லாம் கனவு கண்டுள்ளேன். இவைகள் தான் எனது ஆரம்ப அடிச் சுவடுகள் ஆயினும், குண்டகசாலையில் காணப்படும் விவசாய கல்லூரியில் இணைந்து விவசாயத்தில் டிப்ளோமா கற்கையினை கற்றேன்.

க.பொ.த சாதாரண தர பரீட்சையில் வணிகமும் கணக்கியலும் எனும் பாடத்தினை கற்று A தரம் பெற்ற போதும் 2ம் முறையாக விவசாயப் பாடத்தில் பரீட்சை எழுதி அதிலும் A சித்தி பெற்றேன்.

அதே போன்று திறந்த பல்கலைக் கழகத்தில் விவசாய பொறியியல் பட்டப்படிப்பின் இறுதி ஆண்டில் இருக்கும் போதே விவசாய டிப்ளோமா கற்கைக்காக விவசாய போதனாசிரியையாக 2013 ம் ஆண்டு நியமனம் கிடைத்து. அதிலிருந்து எனது பயணம் ஆரம்பமானது.



**(4) விவசாயிகள் எவ்வாறான பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கிறார்கள்.? அவர்களது பிரச்சனைகளை கையாண்டு எவ்வாறு தீர்த்து வைக்கிறீர்கள்?**

விவசாயிகள் முகம் கொடுக்கும் ஒரு பிரச்சனைதான் தாவரங்களில் ஏற்படும் நோய், பீடைகளின் தாக்கம். அவ்வாறு தாவரங்களுக்கு நோய், பீடைகளின் தாக்கம் ஏற்படும் போது, அது பற்றிய சந்தேகங்களுக்கு என்னை அணுகி தெளிவு பெறுவார்கள். அத்தோடு மாதம் இருமுறை விவசாயப் பயிற்சி வகுப்புகள் மற்றும் பயிர்ச் சிகிச்சை முகாம்களை நடாத்துதல் போன்றவற்றின் மூலம் அவர்களின் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கிறேன்.



அது மாத்திரம் இன்றி "முர்ஷிதா விவசாயம்" என்கிற பெயரில் எனது 02 வாட்ஸ் அப் குழுமங்கள் ஊடாகவும் "முர்ஷிதா விவசாயம்" எனும் யூ டியூப் சேனலையும் ஆரம்பித்து அதன் மூலமாகவும் பயிர் அறிமுகம், நடுகை முறை, நோய் பீடைகளின் தாக்கம், அறுவடை தொடர்பான விஞ்ஞான ரீதியான பதில்களை வழங்கி வருகிறேன். அந்த வகையில் ஜப்பான், அவுஸ்திரேலியா, கத்தார், மலேஷியா, சவூதி அரேபியா, அமெரிக்கா, ஓமான், ஈரான், பாகிஸ்தான், இந்தியா, இலங்கை மற்றும் உள்ளிட்ட பல உலகளாவிய ரீதியில் பலரும் பயன் பெற்று வருகின்றனர்.

மேலும் எனது YouTube channel இல் காண்பிக்கப்படும் அனைத்து வீடியோக்களும் எனது மேற்பார்வையின் கீழ் எனது விவசாயிகளினால் செய்கை பண்ணப்பட்ட தோட்டங்கள் என்பதனையும் இச்சந்தர்ப்பத்தில் நான் கூறிக்கொள்வதில் பெருமிதம் அடைகிறேன்.



***(5) – விவசாயிகளின் பிரச்சனைகளுக்கு அரசாங்கம் நியாயமான தீர்வுகளை முன்வைக்கிறதா அப்படியாயின் அவை என்ன?***

இந்த கேள்விக்கு தற்போது சரியானதொரு பதிலை சொல்ல முடியுமாக இல்லை. காரணம் அரசாங்கம் 100% மானிய அடிப்படையிலும் 50% மானிய அடிப்படையிலும் விவசாய உள்ளீடுகளை வழங்கி விவசாயிகளை பல திட்டங்கள் மூலம் ஊக்குவித்தாலும் சமகாலத்தில் விவசாயிகள் பசளை தொடர்பாக கடும் பிரச்சனைகளை எதிர்நோக்கியதனை மறுக்க முடியாதுதான்.



***(6) அரசு சாராத அமைப்புகளின் உதவிகள் எந்தளவு தூரம் சாத்தியமாக இருக்கிறது?***

விவசாயத் துறையில் அரசு சாராத துறைகள், நிறுவனங்கள் அதிகளவு தமது பங்களிப்பினை வழங்கி வருகிறது. அதாவது உலக நவீன மயமாக்கல் திட்டம், கால நிலைமைகளுக்கு ஏதுவான பயிர்ச் செய்கை திட்டம், YMCA இன் மாற்றுத் கனதிறனாளிகளுக்கான விவசாய திட்டம் என பல முன்னெடுப்புகளை வழங்கி வருகின்றது. அதில் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டம் பல உதவிகளையும் பெறுகிறது. இதனால் மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் தனியார் நிறுவனங்களாலும் பல பயன்களை பெறுகின்றனர்.

**(7) பெண் என்றவகையில் இந்தத் துறையை தேர்ந்து எடுத்தமைக்காக நீங்கள் எதிர்நோக்கிய சவால்கள் என எதைக் கூற விரும்புகிறீர் ?**

பெண் என்ற வகையில் ஆரம்ப காலத்தில் பல பிரச்சனைகளை எதிர்நோக்கிய போதும் கால ஓட்டத்தில் அவற்றை எவ்வாறு எதிர்கொள்வது என்பதான ஒரு தெளிவு கிடைத்தது.. அதாவது, எனது விவசாய கல்லூரியின் இறுதி

ஆண்டுக்கான ஆராய்ச்சி கட்டுரைக்கான தகவல்களை பெற எனது ஊரில் உள்ள ஒரு முக்கிய நபரை சந்தித்த போது அவர் என்னிடம் கேட்டது உங்களால் விவசாய போதனாசிரியர் சேவையில் ஆண்களை போல் ஆடையணிந்து எவ்வாறு வேலை செய்ய முடியும் என்று. அவரின் அறியாமை தான் அதற்கு காரணம். அன்று அதற்கு, என்னால் பதிலளிக்க முடியாமல் போனாலும் கல்லூரியிலும் சரி எனது நியமனத்தின் பின்னரும் சரி ஆடை விடயத்தில் எந்த விதமான பிரச்சினையையும் நானோ ஏனைய எனது சகநண்பிகளோ அனுபவிக்கவில்லை. அவர் அவர்களுக்கு ஏற்றால் போல் நாகரிகமாக தத்தமது கலாசார ஆடைகளான புடவை, அபாயாக்களை அணிந்து பணிபுரிகின்றோம்.

அதேபோன்று பெண்களுக்கு இப்படியான கள வேலைகள் (field work) தேவைதானா? எத்தனை கடினமான வேலை. எத்தனை பேரை சந்திக்க வேண்டும் என்று நம்மை பார்த்து பரிதாபப்படுபவர்கள்போன்று கேள்விகளை கேட்பதும், அவற்றை உண்மையாக என்னில் அக்கரை கொண்டு கேட்பதாகவும் நினைத்து பதிலளித்த காலமும் இருந்து. பின் நாட்களில் தொடர்ச்சி யான கேள்விகள் எனது வேலையின் வேகத்தை படிப்படியாக குறைப்பதாக உணர்ந்தேன். ஒரு முடிவினை எடுக்கின்ற பொழுது பலதரப்பட்ட விதமாக சிந்திக்க வேண்டியுள்ளது. அவ்வாறு சிந்திக்கும் போது இவ்வாறான கேள்விகள் என்னை சரிவர முடிவெடுக்க முடியாத ஒரு சூழலை ஏற்படுத்துவதை அவதானித்தேன்.

அதன் பிற்பாடு கேள்விகளுக்கு விளக்கம் அளிப்பதனை தவிர்த்து, புன்னகையை பதிலாக கொடுக்கப் பழகிக்கொண்டேன். பல பிரச்சனைகளுக்கு மௌனம் தீர்வு என்பார்கள். நானும் அவர்களுக்கு மௌனத்தையும் புன்னகையும் பதிலாக கொடுக்க பழகி விட்டேன். அதனால் முர்ஷிதா என்றால் simple and smile என எனது நண்பர் வட்டம் சொல்லிக்கொள்வதனை பல முறை அவதானித்து இருக்கிறேன்.

நீங்கள் ஒரு பெண் உங்களால் முடியுமா என்ற கேள்விகள் என்னிடம் வரும் போதெல்லாம் "இன்ஷா அல்லாஹ்" என்னால் முடியும் என்றே பதிலளிக்கிறேன். இவ்வாறான பதிலை நான் சொல்வதால் அல்லாஹ் எனது வேலைப்ளுவை இலகு படுத்துகிறான்.மேலும் எனது சிந்தனையில் ஆண் பெண் என்ற பாகுபாடின்றி இவற்றை எல்லாம் செய்வது மனிதர்கள் தான். அவர்களால் செய்ய முடியும் என்றால் நிச்சயம் என்னாலும் முடியும் என நம்பிக்கை கொண்டு அவ்விடயத்தை செய்து முடிக்கிறேன். மேலும் எமது நாட்டின் எதிர்கட்சி தலைவரினால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட நாளில் இருந்து எனது நண்பர்கள் சிங்கப் பெண் என அழைக்க ஆரம்பித்து விட்டனர். அதன் பிரதிபலிப்பாக இருக்கலாம் நான் தற்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் வேற்பாளராகவும் உள்ளேன். அல்ஹம்து லில்லாஹ்.




***(8)– உங்களது தனிப்பட்ட விருப்பு வெறுப்பு, இல்லற வாழ்க்கைக்காக நேரம் ஒதுக்குவதில் நீங்கள் முகம் கொடுக்கும் பிரச்சனைகள் என்ன?***

இந்த விவசாய போதனாசிரியர் எனும் சேவையை மனமுவர்ந்து செய்வதனால் இதில் ஏற்படும் கஷ்டங்களை நான் பெரிதாக எண்ணுவதில்லை. அத்தோடு நமக்கு உணவளிக்கும் தொழில் என்பதனால் ஹலாலாக உழைக்க வேண்டும் என்ற எண்ணமும் தான் என்னை எத்துணை பெரிய சவால்களையும் எதிர்நோக்கி சமாளித்து வேலையை திறம்பட செய்ய உந்து சக்தியாக இருக்கிறது. இருந்த போதிலும் சில விடயங்களில் ஏன் என்று புரியாத சில தாமதங்கள்.....இது வேலைப்பளுவினாலா? அல்லது எனது நசீபா? என்ற கேள்விகளும் என்னில் எலாமல் இல்லை.என்றாலும் அதற்குரிய காரணங்களை இதுவரை என்னால் அனுமானிக்க முடியவில்லை.




***(9) ஒரு சிறந்த சமூகத்தை கட்டியெழுப்புவதில் உங்களின் பங்களிப்பு என்னவாக இருக்கிறது?***

பலதுறைகளில் எனது பங்களிப்பை வழங்கி வருகிறேன் .அதாவது விவசாயத்திற்கு பூரணமான சேவையை முழுமையாக வழங்கி வருகிறேன்.அத்தோடு பிரத்தியேகமாக இரண்டு வாட்ஸ் அப் குழுமங்களை உருவாக்கி உள்ளேன்.அதில் உலகளாவிய ரீதியில் அங்கத்தவர்கள் இணைந்து இருக்கிறார்கள் .அவர்கள் விவசாய துறையில் எதிர்நோக்கும் பல பிரச்சனைகள் மற்றும் பீடை தாக்கம் தொடர்பான கேள்விகளை முன்வைத்து அதற்குரிய தீர்வுகளை உடனுக்குடன் என் மூலமாக பெறுகின்றனர். எனவே உலகளாவிய சில விவசாயிகளுக்கு இந்த வகையிலும் உதவிகளை செய்து வருகிறேன்.



இப்படியான ஒரு சேவை ஏனைய விவசாயத் துறை சார் உத்தியோகத்தர்களால் வழங்கப்படுகிறதா என்பது பற்றி இதற்கு முன்னர் நான் அறிந்ததில்லை. இருந்தும் இவ்வாரான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறேன். எனது முன்னெடுப்புகளைத் தொடர்ந்து ஒரு சிலர் இவ்வாறான முயற்சிகளை தற்போது மேற்கொண்டு வருவதனை என்னால் அவதானிக்க முடியுமாக இருக்கின்ற அதேவேளை என்னைப் போன்று 24 மணித்தியாலங்களும் முழு மனதாக விவசாயிகளுக்கு எனது சேவை மூலமாக உதவி செய்கின்றேன்.இவ்வாறு விவசாயிகளுக்காக ஏனைய எல்லா விவசாய உத்தியோகத்தர்களும் நேரம் ஒதுக்குவார்களாக இருந்தால் எமது விவசாயிகள் ஓரளவுக்கேனும் தங்களது விவசாய செய்கையில் முன்னேறுவதற்கான வாய்ப்புகளை அதிகப்படுத்தலாம்.

என்னை தொடர்ந்து பல வாட்ஸ் அப் குழுமங்கள் ஆரம்பிக்கப்பட்டு இன்று அவை சோர்விழந்துள்ளது. ஆனால் எனது

வாட்ஸ் அப் குழுமம் அல்ஹம்து லில்லாஹ் இன்றுவரை வெற்றி நடைபோடுகிறது. அதற்கு எனது குழுமத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களினதும் ஒத்துழைப்பும் முக்கிய காரணமாகும். மேலும் பலரது அபிமானத்தை வென்று இதன் மூலம் பல நன்மை அடைந்தவர்களின் பின்னூட்டங்கள் அதனை பரைசாட்டுகிறது.

மேலும் என்னால் ஆரம்பிக்கப்பட்ட வாட்ஸ் அப் குழுமத்தின் நோக்கம் எனது தாய் மற்றும் தந்தை யின் மறுமைக்கான தேடலுக்காக என்பதனையும் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.



எனது தாய் தந்தை இருவரும் மரணித்து விட்டார்கள். அவர்களுக்காக என்னால் என்ன செய்ய முடியும் என்று யோசித்த தருணம் ஒரு மார்க்க அறிஞர் கூறியதாவது.. பிள்ளைகள் செய்யும் ஒவ்வொரு நல்ல காரியத்தின் நன்மைகளும் அவர்களது பெற்றோரை சென்றடையும் என்று அந்த தருணம் எனது சிந்தனையில் சிக்கியது தான் இந்த முயற்சி. அல்லாஹ் எனது தாய் தந்தையின் மூலம் எனக்கு அருளிய நிஃமத் எனது கல்வி. எனவே அதனை சரியான முறையில் மக்களிடையே கொண்டுபோய் சேர்க்க வேண்டும். அவர்களின் பசியை போக்கி வருமானத்தை அதிகரிக்க கூடிய விவசாயத்தை ஊக்குவிக்க வேண்டும். அதனால் விவசாய மக்கள் பலன் அடைவார்கள் அதுவே எனக்கு துஆ வாக அமையும். அதே சந்தர்ப்பத்தில் எனது பெற்றோர்களுக்கு அது “சதகா“வாக அமையும் என்று தீர்மானித்தேன். இதனை இந்த சந்தர்பத்தில் குறிப்பிடுவதற்கான காரணம், தற்போதிருக்கும் மற்றும் வளர்ந்து வரும் இளம் சமூகத்துக்கும் ஒரு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும் என்பதனாலேயே. இன்று நம்மில் பலர் நமது மரணித்த பெற்றோர்களுக்கு ஒன்றும் செய்ய முடியவில்லையே என கைசேதப் பட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.வசதி வாய்ப்புகள் இல்லாத போதும் நம்மிடம் உள்ள நல்ல செயல்களை வைத்தே மக்களுக்கு உதவிகளை செய்து எமது பெற்றோர்களுக்கு பணிவிடை செய்யும் ஸாலிஹான பிள்ளைகளாக மாறலாம்.

மேலும் எனது தொழில் பலதரப்பட்ட வர்களையும் சார்ந்ததாக இருப்பதனால் போதை வஸ்து பாவனை ஒழிப்பு,போஷாக்கு விழிப்புணர்வு, பொலித்தீன் பாவனை ஒழிப்பு, இரத்த தான நிகழ்வு என பல விடயங்களிலும் என்னாலான பங்களிப்பை வழங்கக் கூடியதாக இருக்கிறது.

***(10) விவசாயிகளை உருவாக்குவதிலும், ஊக்குவிப்பதிலும் உங்களது வகிபாகம் என்ன?***

விவசாயிகளுக்கான விழிப்புணர்வு கருத்தரங்குகள், பயிர் சிகிச்சை முகாம்கள், வயல் விழாக்கள், மற்றும் மாதம் இருமுறை விவசாயப் பயிற்சி வகுப்புகளை நடத்துதல் போன்றவற்றை மேற்கொள்கிறேன்.

அதே போன்று நிரந்தர பயிர்ச்செய்கை முகாம் என ஒவ்வொரு மாதமும் முதலாம் கிழமையில் வரும் வியாழக்கிழமை களில் ஏறாவூர் வாராந்த சந்தை இடம்பெறும் மீராகேணி சந்தையில் நடத்துகிறேன்.இது எமது திணைக்களத்தின் ஒரு சிறப்பம்சம்.

*இந்த நிரந்தர பயிர்ச் சிகிச்சை முகாமில் எமது பிரதி விவசாய பணிப்பாளர்,உதவி விவசாய பணிப்பாளர், விவசாய போதனா சிரியர்கள் குறைந்தது மூவரும், ஒரு தொழிநுட்ப உத்தியோகத்தர் என பலரும் சமூகமளித்து விவசாயிகளின் பயிர் செய்கையில் ஏற்பட்டுள்ள நோய் பீடை தாக்கங்களுக்கான சிறந்த தீர்வை வழங்குகிறோம்.*




*மேலும் எமது திணைக்களத்தினால் வருடா வருடம் நடத்தப்படும் விவசாய விருது விழாவில் எனது விவசாயிகளையும் பங்குபெறச்செய்து குறைந்தது மூன்று முதலிடங்களையாவது பெற்றுக்கொடுக்கிறேன்.*

***(11) இந்த துறையில் நீங்கள் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக, தனித்துவமாக விளங்குவதற்கு ஏதுவான காரணங்கள் என்னவென்று நீங்கள் கருதுகிறீர்கள்?***

*எனது சேவை மனப்பாங்கும் எனது சேவையை நான் திறம்பட செய்வதும் தான்.அதோடு ஏனைய பல தினணக்களங்கள், பிரதேச செயலகம், நகர சபை, தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள், முன்பள்ளிகள், கிராம அபிவிருத்தி சங்கங்கள், இளைஞர் சங்கங்கள், மகளிர் சங்கங்கள், அரசியல் வாதிகள் என பல்வேறுபட்டவர்களுடன் இணைந்து எனது வேலையை செய்வதும் பல விவசாயம் தொடர்பான புதிய புதிய விடயங்களை இன்னும் நான் கற்றுக்கொண்டு இருப்பதுமாகும்.*

*மேலும், இத்துறையில் பல வழிகளிலும் ஊக்கம் வழங்கிய எனது தாய், சகோதர சகோதரியின் விட்டுக்கொடுப்புகளும் பலதரப்பட்ட சொல்ல முடியாத அளவில்லாத அதாவது வார்த்தைகளினால் மட்டும் சொல்ல முடியாத ஒத்துழைப்பும் பிரதானமான ஒரு காரணமாகும். எனவே அவர்களுக்கு அல்லாஹ் எனக்கு வழங்கும் நன்மையைப் போன்று அவர்களுக்கும் வழங்குவானாக. ஆமீன்.*

*மேலும் எனது சக உத்தியோகத்தர்கள், மேலதிகாரிகள். நண்பர்கள், மீடியா நண்பர்கள் என எல்லோரும் ஒத்துழைப்பு வழங்குவதும் காரணமாகும். அதில் எமது முன்னால் கிழக்கு மாகாண முதலமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினரும் சுற்றாடல் அமைச்சருமான அல் – ஹாபிழ் பொறியியளாலர் Z.A நசீர் அஹமட் அவர்களின் அதிகப்படியான வழிகாட்டலும் ஒத்துழைப்பும் ஒரு காரணமாகும். மேலும் எமது முஸ்லிம் காங்கிரசின் தேசிய தலைமை அப்துல் ரவூப் ஹக்கீம் அவர்கள் வழங்கும் ஆதரவும் ஒத்துழைப்பும், முன்னால் ஏறாவூர் பிரதேச செயலாளரும் இந்நாள் சம்மாந்துறை பிரதேச செயலாளருமான SM முஹம்மத் ஹனீபா, கிழக்கு மாகாண முன்னால் மாகாண விவசாய பணிப்பாளர் SM.ஹூசைன், மீடியா உதவிகள் வழங்கிய AHA. ஹூசைன், ஏறாவூர் சாதிக் அஹமட், S.சுபேஷன், கிராம ஷாபி, ஸஹிர், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஹம்ஸா என பலரின் ஒத்துழைப்பும் காரணம் ஆகும்.*

*அத்தோடு ஏறாவூரில் காணப்படும் கிழக்கு புற்றுநோயாளர் பராமரிப்பு நிலையத்திற்கும் விவசாய ஆலோசகராக இருப்பதனால் அதனோடு இணைந்த உறவுகளான பிரபல தொழிலதிபர் பௌஸ் ஹாஜியார், அஹார் முகம்மட் சேர் என சமூக நற்பணிகளில்*

தங்களை அர்ப்பணித்தவர் களின் தொடர்புகளும் கிடைத்தது. அதுவும் எனது சமூக சேவைகளில் பயனுடையதாக உள்ளது.

சிட்டி ஹார்டன் கித்ர் சித்தீக், ஜின்னா ஹாஜியார் அவர்களையும் இங்கு ஞாபகப்படுத்த வேண்டும். அவர்களும் தொழில் ரீதியாக நட்புக் கொண்டு எனக்கான முகவரி தேடலில் பெண்களும் சாதனையாளர்களாக மாற வேண்டும் என உந்து சக்திகளை வழங்கிக் கொண்டிருக்கின்றனர்.

மேலும் துணிந்தெழு சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் ஜே.எம். பாஸித் அவர்களும் பெண் ஆளுமையென அடையாளப்படுத்தி என்னுடன் தொடர்பு கொண்டு வியூகம் டிவி மூலம் முற்றத்து மல்லிகை எனும் நேரடி நேர்காணல் நிகழ்ச்சியில் பங்கு பெறச் செய்து என்னை சமூகத்திற்கு அறிமுகப்படுத்தியவர்.

இவ்வாறான நிகழ்வுகள் என்னை இன்னும் பல சாதனைகளை படைக்க வேண்டும் என்ற உந்துதல்களை வழங்கியது என்றால் மிகையாகாது.

***(12) உங்களது வாழ்வை மாற்றியமைத்த அல்லது மறக்கவே முடியாத அனுபவங்கள் இருப்பின் இங்கே பகிரலாம்.***

மறக்க முடியாத நிகழ்வுகள் பல. அதில் ஏறாவூரில் எனக்கு வேலை கிடைத்தது. ஒரு விவசாய அமைச்சரின் ஊரில் விவசாய போதனாசிரியராக முதலாவது நியமனம் பெற்றுச் சென்றது தான் எனது வாழ்வில் திருப்பு முனையாக இருந்தது.

தொழிலில் முதல் அனுபவம் அதுவும் வேறு மாவட்டம் பல தரப்பட்ட அரசியல் வாதிகளை கொண்ட பிரதேசம். இத்தனைக்கும் மேல் குடும்பத்தை பிரிந்து தங்கி வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம், இப்படியான பல சவால்கள். என்றாலும் நான் நினைத்ததை விட அதிகாரிகளை சிறப்பாக நடத்தும் அரசியல் வாதி என்பதனை அமைச்சர் நசீர் அஹமட் நிரூபிக்க தவறவில்லை .



நான் ஒரு பெண் உத்தியோகத்தர் என்றாலும் வேலையில் எந்த வித குறைபாடும் இருக்க கூடாது என்பதிலும் விரைவும் விவேகமும் தேவை எனவும் அடிக்கடி சொல்லிக் கொள்வார். இதுவே நான் ஒரு சிறந்த உத்தியோகத்தராக மாற வழிவகுத்தது. மேலும் அரசியல் பக்க சார்பில்லாமல் சுயாதீனமாக வேலை செய்யவும் ஊக்கமளித்தார். எனது தற்போதைய வெற்றிகளில் இவரின் பங்கு இணையற்றது.

அதுபோல் DCC கூடத்தில் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் திணைக்கள தலைவர்கள் ஏனைய உத்தியோகத்தர்கள் மத்தியில் நானும் எனது திணைக்களம் சார்பாக பேச கிடைத்த தருணங்கள் அதில் ஒத்துழைப்பு வழங்கிய மற்றும் எவ்வாறு தைரியமாக பேச வேண்டும் என சொல்லித் தந்த பிரதேச செயலாளர் SMM.ஹனீபா என மறக்க முடியாதவர்கள் பலர்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் மற்றும் முன்னாள் முதலமைச்சர் என நாட்டின் முதுசங்களான பெரியவர்களோடு சேர்ந்து வேலை செய்ய கிடைத்ததே எனது விவசாய போதனாசிரியர் என்ற வேலையும் எனது பின்புலமும் என்பதும் என் வாழ்க்கையில் மறக்க முடியாத ஒன்றாகும்.

அதே போல் “6000 மரக்கன்றுகள் நடுகை செய்தலும் போதை ஒழிப்பு திட்டமும்“

*எனும் நிகழ்வில் முன்னால் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன அவர்களினால் மா மரக்கன்றுகள் விநியோகிக்கும் நிகழ்வில் எமது முன்னால் முதலமைச்சரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான அல் - ஹாபிழ் பொறியாளர் நசீர் அஹமட் அவர்களினால் கௌரவ உத்தியோகத்தராக என்னை பிரதிநிதி துவப்படுத்தி ஜனாதிபதிக்கு மா மரக்கன்று வழங்கி நடுகை செய்வித்த தருணம்.*

*எமது விவசாய திணைக்களத்தினால் நடாத்தப்படும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்கள், வல்லுனர்கள் கலந்து கொள்ளும் ஆராய்ச்சி மற்றும் விதை, நாற்று வர்க்கங்களை பரிந்துரை செய்யும்* ASDA *நிகழ்வில் பங்கேற்க தருணம்.*
*என பல உள்ளது.*

***(13) உங்களுக்கு, உங்களை சார்ந்தவர்களின் ஆதரவு எந்தளவு தூரம் கைகொடுக்கிறது?***

*என்னை சார்ந்த வர்களின் பங்களிப்பு மிக அதிகம். எனது தாய் தன் எனது "ரோல் மொடல்" என இங்கு கூறிக்கொள்வதில் பெருமிதம் அடைகிறேன். அல்லாஹ் எனது பெற்றோருக்கு சுவனத்த்தை வழங்குவானாக ஆமின். எனது சகோதரர் மற்றும் சகோதரி பல வழிகளிலும் எனக்கான ஆதரவினை வழங்கிக்கொண்டு இருக்கிறார்கள். அல்லாஹ் அவர்களுக்கும் ஆரோக்கியத்தையும் பரக்கத்தையும் வழங்குவானாக ஆமின்.*

***(14) உங்களைப்பாராட்டி உங்களுக்காக கிடைத்த விருதுகள் பற்றி சில வரிகள்.***

*ஏறாவூர். சலாமா பவுண்டேஷன் மூலம் சிறந்த சேவையாளர் விருது.*

*ஏறாவூர் நகர சபையின் முன்னாள் தவிசாளர்* MSM.*நளீம் அவர்களினால் வழங்கி வைக்கப்பட்ட "வாழும் போதே வாழ்த்துவோம்" வாழ்நாள் சாதனையாளர் விருது – 2022,*

*மர்ஹூம் அல்- ஹஜ் ஏ.எஸ்.எம் சம்சுதீன் ஆலிம் கலை கலாசார ஊடக சமூக மேம்பாட்டுக்கான அமையம் மற்றும்* LACSDO *மீடியா நெட்வேர்க் ஸ்ரீ லங்கா வினால் வழங்கப்பட்ட திறமைக்கான தேடல் விருது - 2023 இன் சமூக மாமணி விருது,*



*எமது நாட்டின் எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச அவர்களினால் வழங்கப்பட்ட சிறந்த விவசாய உத்தியோகத்தர் விருது, சக்தி* TV *மற்றும் வானொலி நிறுவனம், சிரச* TV *ஊடக வலையமைப்பான மகாராஜா கம்பனி உடன் இணைந்து கிராமிய அபிவிருத்தி வங்கி என்பன இணைந்து நடாத்தும் ஆளுமைமிக்க மகளிருக்கான விருது வழங்கல் "வனிதா அபிமான" விருது, இவ்வருடம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் நடாத்தப்பட்ட மகளிர் தின நிகழ்வில் கௌரவ அதிதியாக அழைக்கப்பட்டதுடன் பரிசிலும் வழங்கி கௌரவித்தனர். மேலும் எனக்கு இலக்கிய துறை ஆர்வம் உண்டு. அதனால் அத்துறையிலும் கவிதை, சிறுகதை, கட்டுரை, நாட்டார் பாடல் என பலதிலும் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட போட்டிகளில் பங்குபற்றி பல முதலிடங்களையும் பெற்றுள்ளேன்.*

***(15) துணிந்தெழு சஞ்சிகையில் ஆளுமைகள் அறிமுகம் பற்றி உங்களது கருத்து என்ன?***

*ஒரு சிறந்த முயற்சி என்னைப் போன்ற பலர் பல்வேறுபட்ட சேவைகளையும் எமது சமூகத்திற்கு ஆற்றி வந்தாலும் மக்களால் இன்னும் அறியப்படாமல் முற்றத்து மல்லிகையாக மட்டுமே உள்ளனர். அதனை தகர்த்தெறிந்து அவர்களை உலகறியச் செய்யும் இந்த ஆளுமை அறிமுகம் ஒரு சிறந்த முயற்சியாகவே உள்ளது.*

*இப்படியான விடயங்களை சுமந்து வரும் துணிந்தெழு சஞ்சிகை மற்றும் அதன் பிரதான ஆசிரியர், ஏனைய ஆசிரியர் குழாம் அதற்கு அனுசரணை வழங்குபவர்கள் அனைவரையும் மனமார வாழ்த்துகிறேன். மேலும் துணிந்தெழு சஞ்சிகை இன்னும் பல சாதனைகள் படைக்க வேண்டும் எனவும் பிரார்த்திக்கிறேன்.*

***(16) உங்களுக்கு பிடித்த பகுதியாக நமது துணிந்தெழு சஞ்சிகையில் எந்த பகுதியை குறிப்பிட விரும்புகிறீர்?***

*ஆளுமை அறிமுகம், கவிதைப் பகுதி என எல்லா பகுதிகளும் அசத்தலாகவும் இன்றைய தேவையாகவும் இருக்கிறது. எனவே எனது பார்வையில் எல்லா பகுதியும் முதுசமே. இறுதியாக, என்னை ஆளுமை அறிமுகம் எனும் தலைப்பில் அறிமுகம் செய்த துணிந்தெழு சஞ்சிகைக்கு மீண்டும் ஒருமுறை நன்றியை தெரிவிப்பதோடு பெண்கள் சாதனைகளை புரிய பெண்ணியம் தடையாக உள்ளது என்பதனை மறுக்கின்றேன். தற்காலங்களில் “ஆளுமை“ எம்மிடம் உள்ள போது ஆண் இனம் எம்மை கொண்டாட தயாராக உள்ளார்கள். எனது இப்பயணத்தில் ஆண், பெண் என்ற பாலின வேறுபாடு இன்றி இருபாலாரும் அவர்களது பூரண ஒத்துழைப்பினை வழங்கி வருகின்றனர். இதுவே எனது பிரகாசத்திற்கும் வெற்றிகளுக்கும் காரணமாகும். எனவே எனது பயணத்தில் பக்க பலமாய் உள்ள அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.*

*மேலும் ஆண் ஆளுமைகளும் மேற்ப்பட வேண்டும். அநேகமான நிகழ்வுகள் பெண்களுக்காகவே வடிவமைக்கப்படுகிறது. அவ்வாறு இல்லாமல் ஆண், பெண் இரு பாலினத்தவர்களையும் போற்றியே ஆக வேண்டும்.*






# கத்தாரில் தற்போது கடும் சூட்டுடன் கூடிய காலநிலை காணப்படுகின் றமையினால்

**காலை 10.00 மணி முதல் நன்பகல் 3.30 வரை திறந்த வெளிகளில் பணியாளர்களை வேலைக்கு அமர்த்த தடை விதிக்கப்பட்டுள்ளதாக தொழிலாளர் விவகாரங்களுக்கான அமைச்சு தெரிவித்துள்ளது.**

*ஜூன் மாதம் 1ம் திகதி முதல் செப்டம்பர் மாதம் 15ம் திகதி வரை கத்தாரில் கடும் வெப்பம் நிலவுவதனால் பணியாளர்களின் ஆரோக்கியம் கருதி கத்தார் இந்த சட்டத்தை இயற்றியுள்ளது.*

*இது போன்ற சூடு நிலவும் காலங்களில் களப்பணியாளர்களுக்கான களைப்பாறுவதற்கான இடங்கள், மற்றும் குளிர்ச்சியான தண்ணீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது நிறுவனங்களின் பொறுப்பாகும் தொழிலாளர் அமைச்சகம் தெரிவித்துள்ளது.*

*களப் பணியாளர்களைப் பொறுத்தவரை 8 மணி நேரங்களில் பணி புரிபவர்களாக இருந்தால் காலையில் 5 மணித்தியாலங்களும் ஏனைய 3 நேரங்கள் மாலையில் என்ற அடிப்படையில் அமைய வேண்டும் என்பதாக அமைச்சு தெளிவு படுத்தியுள்ளது.*

*மேலும், தனியார் நிறுவனங்கள் இந்த சட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்துகின்றனவா? என்பதை கண்காணிக்க அதிகாரிகள் கள விஜயங்களை மேற்கொள்வார்கள் என்பதாகவும், மீறும் நிறுவனங்கள் மீது கடுமையான தண்டனைகள் விதிக்கப்படும் என்பதாகவும் கத்தார் தொழிலாளர் விவகார அமைச்சு விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த நடைமுறை தொடர்பான விளிப்புணர்வு நிகழ்ச்சிகளை அமைச்சு ஏற்கனவே ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.*






# MUTUR JMI PUBLICATION

CUSTOMER SATISFACTION 100% GUARANTEE

jmi MUTUR

# Offset Printing & Photocopy , Print Services

## MINIMUM QUANTITY 100

40% OFF

**Book Publication & Printing Center**

***Island Wide Free Delivery Available***

Book Binding | Teachers Guide | Past Papers | Certificate | Assignment | Syllabus Notes & Books | Tution Class Tutes | Offset Work | Photo Printing | Album Printing | Advertisement & Leaflet |

FREE DELIVERY




### *Offset Printing*

- Four Color to One Color
- 70 ~ 250 GSM Papers
- A5, A4, A3, Offset Printing
- Photocopy & Duplo
- Typing & Layouts
- Cover Design
- Visiting Card

***A4 - 5.00***
***A3 - 11.00***




### *Book Binding*

- Perfect & Hard Binding
- Book Publication
- Glossy & Mett Lamination
- 60 - 80 Gsm Papers
- Magazine, Book, Project
- Instalment Payment Available

***A4 - 5.20***
***A3 - 11.50***
***B5 - 9.50***




### *Color Printing*

- Four Color (Inject & Laser)
- 70 ~ 250 GSM Board & Papers
- A5, A4, A3, B5, Color Printing
- Certificate & Photos
- Layouts & Designing
- Art Paper, Photo Board, Sticker, Ivory Board, and Etc

***A4 - 40.00***
***A3 - 100.00***

***Mutur JMI***

**Our Office**
Bazar Mosque Road
Mutur - 04, 31200
Trincomalee, Sri Lanka

**Contact Now**
***+94 77 1020030***
***+94 262238593***

**More Information**
www.mutur-jmi.com
muturjmi@gmail.com
https://g.co/kgs/wBo6ob

துணிந்தெழு

# தனித்துவமே நமது அடையாளம்



துணிந்தெழ சஞ்சிகையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் எழுத்தாளுமைகளுக்கும்
வாசகர் நெஞ்சங்களுக்கும், அனைத்து உறுப்பினர்களுக்கும்
இதயபூர்வமான நன்றிகள்...!



#Thuninthelu www.skytamilmedia.com